est 1978
ஈ-சன்ஸ்
அந்தியகால சேவை
இல 148, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்
021 222 2695

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 277

ஞாயிற்றுக்கிழமை
31 ஓகஸ்ட் 2025

ஆவணி 15 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

## வவுனியாவில் தீ விபத்து

வவுனியா, ஓக.31
வவுனியா, முதலாம் குறுக்குத் தெருவில்
04

## குற்றக்கும்பல் இலங்கைக்கு கொணர்வு!

கொழும்பு, ஓக.31
இந்தோனேசியாவில் கைதுசெய் யப்பட்ட
04

## தள்ளாத வயதில் தளராத உறுதி

யாழ்ப்பாணம், ஓக.31
காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களில் பலர் தங்களின் தள்ளாத வயதிலும், கடும் வெயிலுக்கு மத்தியில் போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.
காணாமல் ஆக்கப்பட்ட தங்களின் உறவுகளைத் தேடி பல ஆண்டுகளாகப் போராட்
15




# வேண்டும் நீதி!

### வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்காக வடக்கு, கிழக்கில் நேற்றுத் திரண்டனர் மக்கள்

**யாழ்ப்பாணம், ஓக.31**

**வடக்கு, கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டங்கள் வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்பட்டன. சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான நேற்று வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**
15

## விசேட உரையாற்ற தயாராகும் ரணில்?



கொழும்பு, ஓக.31
முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 6ஆம் திகதி நாட்டு மக்களுக்கு விசேட உரையொன்றை நிகழ்த்தவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாடு எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், அன்று ரணில்
15

## செம்மணிப் புதைகுழியில் நேற்றும் 10 என்புக்கூடுகள்



யாழ்ப்பாணம், ஓக.31
செம்மணி - சித்துப்பாத்தி இந்துமயானத்தில் இனங்காணப்பட்ட மனிதப் புதைகுழியில் நேற்று 10 என்புக்கூடுகள் புதிதாக அடையாளம் காணப்
15

## குடும்பஸ்தர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஓக.31
திடீர் சுகவீனம் காரணமாக இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் வட்டுக்கோட்டையில் நேற்று நடந்துள்ளது.
வட்டுக்கோட்டை, கலட்டிப் பகுதியைச்
04

## ஐ.நா. அறிக்கைக்கு வீரசேகர எதிர்ப்பு!



கொழும்பு, ஓக.31
ஜெனிவாவில் சமர்ப்பிக்கப்படவுள்ள இலங்கை தொடர்பான அறிக்கைக்கு எதிர்ப்பு வெளியிடும் வகையில் தெற்கில் கையெழுத்துச் சேகரிப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.
முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகரவின் ஏற்பாட்டில் இந்த
14

## நீதியை வழங்குவதே அரசின் நிலைப்பாடு

*நீதி அமைச்சர் தெரிவிப்பு*



கொழும்பு, ஓக.31
வலிந்து காணாமல் ஆக்கப்படலால் பாதிக்கப்பட்ட தரப்புகளுக்கு நீதியை உறுதிப்படுத்துவதுடன், இதற்கு இயலுமானவரை விரைவாகத் தீர்வுகாணவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன
15

### முச்சந்தி முரளி

'எப்பிடிக் கேட்டாலும் உவையள் நீதியின்ர பாதியைக்கூட தராயினம் கண்டியளோ'

## நவம்பர் 7இல் 2026 பட்ஜெட்!

கொழும்பு, ஓக.31
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 2026 ஆம் நிதியாண்டுக்குரிய வரவு - செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் 7ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. நிதி அமைச்சர் என்ற வகையில் வரவு - செலவுத் திட்டத்தை
04

சஞ்சீவி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 30.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 4179
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 01 12 34 73
விசேட எழுத்து M

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி 30.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1246
வெற்றி இலக்கினம் மேஷம்
வெற்றி இலக்கங்கள் 03 19 30 52

**NLB ஜய**
திகதி 30.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0205
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கங்கள் 6 5 7 2

**மெகா பவர்**
திகதி 30.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2285
ஆங்கில எழுத்து K
சுப்பர் இலக்கம் 17
வெற்றி இலக்கங்கள் 13 56 61 67

**மஹஜன சம்பத**
திகதி 30.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 5937
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 7 7 3 4 7 7

**தன நிதானய**
திகதி 30.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1967
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கங்கள் 41 47 73 80
விசேட எழுத்து V

**அத சம்பத**
திகதி 30.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0512
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 3 4 7 7

**சுப தவசக்**
திகதி 30.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0053
வெற்றி இலக்கினம் ரிஷபம்
வெற்றி இலக்கங்கள் 05 23 24 32

# மாகாணசபைத் தேர்தல் முடிவை உடன் அறிவிக்குக

## கபே அமைப்பு வலியுறுத்து

**கொழும்பு, ஓக.31**
**மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் அரசாங்கம் உட்பட சகல அரசியற் கட்சிகளும் வெகுவிரைவில் தத்தமது நிலைப்பாடுகளை அறிவிக்க வேண்டும் என சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் இயக்கம் வலியுறுத்தியுள்ளது.**

இதுதொடர்பில் அவ்வமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மஹீம் தெரிவிக்கையில், மாகாணசபைத் தேர்தல்கள் காலம் தாழ்த்தப்பட்டமைக்கான பொறுப்பினை நல்லாட்சி அரசாங்கமே ஏற்க வேண்டும். வெகு விரைவில் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் சகல அரசியற் கட்சிகளும் தமது நிலைப்பாடுகளை அறிவிக்க வேண்டும். மாகாணசபைத் தேர்தல் முறைமை தொடர்பில் நாடாளுமன்றத்திலேயே திருத்தங்கள் முன்வைக்கப்பட வேண்டும். பழைய முறைமையில் தேர்தலை நடத்துவதா அல்லது திருத்தப்பட்ட கலப்பு முறைமையில் தேர்தலை நடத்துவதா என்பதை நாடாளுமன்றமே தீர்மானிக்க வேண்டும். அல்லது மாகாணசபை முறைமையை நீக்கும் நிலைப்பாட்டில் இருந்தால் அதனையாவது மக்களிடம் கூறுமாறு வலியுறுத்துகின்றோம். ஒரு மாதத்துக்கு முன்னர் எமது அமைப்பினால் மாகாணசபை தொடர்பில் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. ஆனால் இன்னும் அதற்கு எவ்வித பதிலும் இல்லை. அரசியற் கட்சிகளுக்குத் தாம் எதிர்க்கட்சி லிருக்கும்போது மாத்திரமே மாகாண சபைத் தேர்தல் நினைவுக்கு வருகிறது. ஆனால் அவர்கள் ஆட்சி யமைக்கும்போது அதனை மறந்து விடுகின்றனர் - என்றார். (ச-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி 30.08.2025
தினம் சனிக்கிழமை
வெற்றி வாரம் 0645
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கம் 0 1 1 8 4 6

**Super Ball**
திகதி 30.08.2025
தினம் சனிக்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2911
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கம் 03 41 71 75

**சனிதா**
திகதி 30.08.2025
தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கம் 14 26 48 67
வெற்றி வாரம் 5072

**SASIRI**
திகதி 30.08.2025
தினம் சனிக்கிழமை
வெற்றி வாரம் 0759
வெற்றி இலக்கம் 08 45 47

**லக்ன ராசி**
திகதி 30.08.2025
தினம் சனிக்கிழமை
மீனம்
வெற்றி இலக்கம் 13 16 41 56
சீட்டிழுப்பு வாரம் 4623

**KAPRUKA**
திகதி 30.08.2025
தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து O
சுப்பர் இலக்கம் 29
வெற்றி இலக்கம் 08 18 35 37
வெற்றி வாரம் 2087

**அத கோடிபதி**
திகதி 30.08.2025
தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கம் 13 18 24 26
வெற்றி வாரம் 2736

# பணவீக்கம் மீள உயர்வு

கொழும்பு, ஓக.31
11 மாதங்களுக்குப் பிறகு, கொழும்பு நுகர்வோர் விலைக் குறியீட்டை அடிப்படையாகக் கொண்ட பணவீக்கம் ஓகஸ்ட் மாதத்தில் மீண்டும் அதிகரித்துள்ளது.
புள்ளியியல் துறை வெளியிட்ட தரவுகளின்படி, ஜூலை மாதத்தில் 0.3% இலிருந்து ஓகஸ்ட் மாதத்தில் பணவீக்கம் 1.2% ஆக அதிகரித்துள்ளது. உணவுப் பணவீக்கம் ஜூலை மாதத்தில் 1.5% இலிருந்து 2.0% ஆகவும், உணவு அல்லாத வகை ஜூலை மாதத்தில் 1.2% இலிருந்து 0.8% ஆகவும் அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)



# விடுதலைப்புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்படவில்லை!

## கூறுகிறார் நாமல்

கொழும்பு, ஓக.31
தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு இன்னும் கருத்தியல் ரீதியில் தோற்கடிக்கப்படவில்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
இந்நாட்டில் பயங்கரவாதத்தை இல்லாதொழித்து, நாட்டு மக்களுக்கு உயிர் பயமின்றி வாழ்வதற்குரிய சூழ்நிலையை ஏற்படுத்திய படையினர் மீண்டும் வேட்டையாடப்படுகின்றனர்.
புலிகள் அமைப்பு, கட்டமைப்பு ரீதியாகத் தோற்கடிக்கப்பட்டாலும் அதன் பிரிவினைவாதக் கருத்தியல் இன்னும் முடியவில்லை.
பயங்கரவாதிகளுக்காக (புலிகள்) சர்வதேசத்தில் நினைவகம் அமைக்கப்படுகின்றது. ஆனால் படையினருக்கு அமைத்தால் அதனை இனவாதமாகக் காட்ட முற்படுகின்றனர். முன்னாள் கடற்படைத் தளபதியொருவர் சிறை வைக்கப்பட்டுள்ளார். அடையாள அணிவகுப்பில் புலி உறுப்பினர் ஒருவரே சாட்சியமளித்துள்ளார். இப்படியான நிலை வருமென அந்த கடற்படைத் தளபதி நினைத்தும் பார்த்திருக்கமாட்டார். இப்படியான நிலைமையே இங்கு நிலவுகின்றது. எமது நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்த படையினரை நாம் காக்கவேண்டும்- என்றார். (ச-44)

# மைத்திரி, கோத்தாபயவுக்கு அரசாங்கம் வலைவிரிப்பு

கொழும்பு, ஓக.31
முன்னாள் ஜனாதிபதிகள் மைத்திரிபால சிறிசேன மற்றும் கோத்தாபய ராஜபக்ச ஆகியோர் பொதுச் சொத்துகளைத் தவறாகப் பயன்படுத்திய பல சம்பவங்கள் தொடர்பாக இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்படவுள்ளது.
ஊழல் மற்றும் மோசடிக்கு எதிராகப் போராடும் பல சிவில் சமூக அமைப்புகளால் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.
இந்த அமைப்புகள் சமீபத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் தொடர்புடைய அனைத்துத் தகவல்களையும் பெற்றுள்ளன.
அவற்றில், மைத்திரிபால சிறிசேனவின் தனிப்பட்ட தலையீட்டில் மேற்கொள்ளப்பட்ட பல கட்டுமானங்களும், கோத்தாபய ராஜபக்சவால் மேற்கொள்ளப்பட்ட பல மோசடிகளும் அடங்கும்.
இது குறித்து கருத்துத் தெரிவித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், ஆனந்த விஜேபால, "இது போன்ற முறைப்பாடுகள் தகவலுடன் சமர்ப்பிக்கப்பட்டால், முறையான விசாரணைகளை நடத்தி தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டோம் - என்றார். (ச-இ)

# வெற்றிப்பாதையில் சஜித்- ரணில் இணைவு

கொழும்பு, ஓக.31
ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியை ஒன்றிணைப்பதற்குரிய முயற்சி வெற்றியை நோக்கி நகர்ந்துள்ளது எனத் தெரியவருகின்றது.
எதிர்வரும் 6 ஆம் திகதி இது பற்றிய அறிவிப்பு வெளியாகக் கூடும் என சிறிகொத்த வட்டாரங்கள் தெரிவித்தன.
ஐக்கிய தேசியக் கட்சியின் 79 ஆவது ஆண்டு விழா எதிர்வரும் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது.
ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு எதிர்க்கட்சித் தலைவரையும் அழைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.
இந்தக் கூட்டத்தின்போது இருதரப்பு இணைப்புக் குறித்து இருதரப்பில் இருந்தும் அறிவிப்புகள் வெளியாகும் என நம்பப்படுகின்றது.
ரணில் விக்கிரமசிங்க சிறை வைக்கப்பட்ட பின்னர் அவரின் விடுதலைக்குரிய அரசியல் சமரை ஐக்கிய மக்கள் சக்தியே முன்னின்று நடத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிந்து காணாமலாக்கப்படுதல்கள்; சுயாதீன விசாரணை அவசியம்!!



## ஐ.நா. பிரதிநிதி மார்க் அன்ட்ரூ வலியுறுத்து

**கொழும்பு, ஓக.31**

**இலங்கையில் பல தசாப்தகாலமாக வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினர் தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறியாமல் வாழ்ந்து வருகின்றனர். அந்தநிலை தொடர்வதன் ஊடாகக் கடந்தகாலக் காயங்களை ஆற்றமுடியாது. எனவே மீறல்களின் தீவிரத்தன்மையை உணர்த்தும் மனிதப்புதைகுழிகள் தொடர்பில் நம்பத்தகுந்த சுயாதீன விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி மார்க் அன்ட்ரூ பிரான்சே வலியுறுத்தியுள்ளார்.**

வலிந்து காணாமலாக்கப்படல்களால் பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேச தினத்தை காணாமற் போனோர் பற்றிய அலுவலகத்தினால் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்பில் அமைந்துள்ள அலரிமாளிகையில் விசேட நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது யாழ். செம்மணியில் அடையாளங்காணப்பட்டுள்ள மனிதப்புதைகுழியில் சிறுவர்களது மனித எலும்புக்கூடுகள் உள்ளிட்ட மனித எச்சங்களும், பாடசாலைப்புத்தகப்பை உள்ளிட்ட பொருள்களும் கிடைக்கப்பெற்றிருப்பதானது மனித உரிமை மீறல்களின் தீவிரத்தன்மையை உணர்த்துகின்றது. குறிப்பாக நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு உண்மை மற்றும் நீதியை உறுதிப்படுத்தவேண்டியது அவசியம்.

அத்தோடு நீண்டகாலமாக நிலுவையிலுள்ள வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் குறித்த வழக்குகள் தொடர்பில் துரித விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

வலிந்து காணாமலாக்கப்படல் விவகாரத்தைப் பொறுத்தமட்டில், பாதிக்கப்பட்ட குடும்பங்களுடன் தொடர்பை ஏற்படுத்தி ஒத்துழைப்புடன் செயலாற்றுவதன் ஊடாகவே அவர்களது நம்பிக்கையைக் கட்டியெழுப்பமுடியும். குற்றங்களில் ஈடுபட்டவர்கள் முறையான விசாரணைகள் ஊடாகப் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவேண்டும்.

அதற்கு அவசியமான ஒத்துழைப்புகளை வழங்குவதற்கு சர்வதேச சமூகமும், ஐக்கிய நாடுகள் சபையும் தயாராக இருக்கிறது. அதற்கமைய கடந்தகால மீறல்கள் தொடர்பில் உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீள்நிகழாமை என்பன உறுதிப்படுத்தப்படவேண்டும் - என்றார். (ச-இ)

# மன்னார் மருத்துவமனை அபிவிருத்திக்கு அதிக நிதி

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

மன்னார், ஓக.31

முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்ட மருத்துவமனைகளின் தேவைப்பாடுகள் மற்றும் அபிவிருத்திப்பணிகளுக்கென அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண ஆளுநர் நா .வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட மருத்துவமனையின் நிலைமைகளை வடக்கு மாகாண ஆளுநர் நேரில் சென்று பார்வையிட்டதுடன் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினருடனும் கலந்துரையாடல்களை மேற்கொண்டார்.

இதன்போது மன்னார் மாவட்ட மருத்துவமனை மாகாணசபையிருந்த காலத்திலும் கவனத்திற் கொள்ளப்படவில்லை என்றும் அதன் பின்னரும் கவனத்திற் கொள்ளப்படவில்லை என்றும் நோயாளர் நலன்புரி சங்கத்தினர் சுட்டிக்காட்டினர்.

மேலும் நிரந்தர மருத்துவநிபுணர் இல்லாமை மற்றும் ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளமை தொடர்பிலும் அவர்கள் ஆளுநருக்கு எடுத்துரைத்தனர்.

அவற்றுக்குப் பதிலளித்த ஆளுநர் மன்னார் மருத்துவமனையை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் புறக்கணிக்கவில்லை. முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்ட மருத்துவமனைகளுக்கே அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மருத்துவமனையின் தேவைப்பாடுகள் தொடர்பில் கவனத்திற்கொள்ளப்படும். மாகாணசபையின் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளக்கூடிய அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் அடுத்த மாதம் தொடர்புடைய தரப்புகளை அழைத்துக் கலந்துரையாடல் நடத்தப்படும் என்றும் ஆளுநர் உறுதியளித்தார். (ச-60)

# ஆசனப்பட்டி கட்டாயம் வர்த்தமானி இன்று!

அதிவேக நெடுஞ்சாலையில் பயணிகள் போக்குவரத்து பேருந்துகளில் செல்லும் பயணிகளுக்கு ஆசனப்பட்டி அணிவதைக் கட்டாயமாக்கும் வர்த்தமானி அறிவித்தல் இன்று வெளியிடப்படும் எனப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரும், நாடாளுமன்றசபை முதல்வருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு அமைச்சரும் சபை முதல்வருமான பிமல் ரத்நாயக்க தலைமையில் அண்மையில் நாடாளுமன்றத்தில் கூடியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

'கிளீன் ஸ்ரீலங்கா' திட்டத்தின் ஒரு முக்கியமான அம்சமாக இதனை நடைமுறைப்படுத்துவதாகச் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்கும்பாடசாலைபேருந்துகள், அலுவலக சேவைப் போக்குவரத்துப் பேருந்துகள், சுற்றுலாப் பேருந்துகள் மற்றும் ஏனைய பேருந்துகளுக்கும் ஆசனப்பட்டிகளைப் பொருத்துவதற்கு சுமார் 3 மாத கால அவகாசம் வழங்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ச-இ)

**அறைகள் வாடகைக்கு உண்டு**
யாழ். பல்கலைக்கழகம் மற்றும்
Nothern Central Hospital
அருகாமையில் அறைகள்
வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 233 6267
(CS 3928) A

**திருநெல்வேலி காணி விற்பனைக்கு**
பரப்பு - 2, 2 1/2
மக்கள் வங்கி - 100 மீற்றர்
பலாலி வீதி - 75 மீற்றர்
தொடர்பு:077 253 2575
(CS 3926)A



சாவகச்சேரியில்

# மரபுரிமைச் சின்னமான சுமைதாங்கி இடித்தழிப்பு



யாழ்ப்பாணம், ஓக. 31

சாவகச்சேரி நுணாவில் கிழக்கு கல்வயல் வீதியில் அமைந்திருந்த பாரம்பரிய மரபுரிமைச் சின்னமான சுமைதாங்கி தனியார் ஒருவரால் முற்றாக இடித்து அகற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பாகப் பிரதேசமக்கள் சாவகச்சேரி நகரசபை உபதவிசாளர் கிஷோருக்கு அறிவித்ததையடுத்து அவர் சம்பவ இடத்துக்குச் சென்று நிலைமைகள் தொடர்பில் அவதானித்து இடித்த சுமைதாங்கியை இடித்தவர்களை வைத்தே மீண்டும் அமைக்க நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

மேலும் நகராட்சிமன்ற எல்லைக்குட்பட்ட பாரம்பரிய மரபுரிமைச் சின்னங்களை அடையாளப்படுத்தி தொல்பொருள் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்படாத சின்னங்களை நகரசபைமூலம் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் உறுதியளித்தார். சுமைதாங்கி உடைக்கப்பட்டமை தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் பிரதேச மக்களால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. (ச-25, 28,20,27)



**நாகபூஷணி திருமண சேவை**
வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார் துறை, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக் கணக்கில் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு, துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.
359/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(துர்க்கா மணிமண்டபத்திற்கு அருகாமையில்.)
லிங்கா பெஷன் முன் ஒழுங்கை
077 138 7596, 071 999 9306

**கண்ணீர் அஞ்சலி**



எமது யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.க.சுரேஸ்பாபா அவர்களின் அன்புத் தந்தையாராகிய

**மாணிக்கம் கணேஷ்**

அவர்களின் பிரிவால் ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணைய
அலுவலக உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவு சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவம்பர்...

முன்வைத்து ஜனாதிபதி உரையாற்றவுள்ளார். வரவு - செலவுத் திட்டம் தொடர்பான (2 ஆம் வாசிப்பு மீதான) விவாதம் நடைபெறும். 2ஆம் வாசிப்பு மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டு அது நிறைவேற்றப்பட்ட பின்னர் 3 ஆம் வாசிப்பு மீதான விவாதம் நடைபெறும். இது அமைச்சுகளுக்குரிய நிதி ஒதுக்கீடுகளைக் குறிக்கும். டிசெம்பர் மாத நடுப்பகுதியில் வரவு செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு நடைபெறும்.

வரவு- செலவுத் திட்டத்தின் முன்னோடியான ஒதுக்கீட்டுச் சட்டவரைவு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் சபையில் முன்வைக்கப்படும். இது முதலாம் வாசிப்பாகக் கருதப்படும். இது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 2ஆவது வரவு - செலவுத் திட்டமாகும். (அ-எ-44)

## குடும்பஸ்தர்...

சேர்ந்த 45 வயதான குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

நேற்றுக் காலை சுகவீனம் காரணமாக ஓய்வெடுத்த அவர், அசைவற்றுக் காணப்பட்டுள்ளார். அதையடுத்து உறவினர்கள் அவரை வட்டுக்கோட்டைப் பிரதேச மருத்துவமனைக்குக் கொண்டு சென்றுள்ளனர். ஆயினும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைக்காக உடல் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ-எ-27)

## வவுனியாவில்...

உள்ள கடைத்தொகுதி ஒன்றில் நேற்று தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

விவசாய உபகரணங்கள் விற்பனை செய்யும் கடையின் மேல்மாடியில் உள்ள களஞ்சியத்திலேயே இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. வவுனியா மாநகர சபையின் தீயணைப்புப் படைப்பிரிவு, களஞ்சியத்தில் பரவிய தீயைப் பலமணி நேரப் போராட்டத்தின் பின்னர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது. ஆயினும் அங்கிருந்த விவசாய உபகரணங்களின் ஒரு தொகுதி தீயில் நாசமாகியுள்ளது.

தீ விபத்துக்கான காரணம் கண்டறியப்படவில்லை. இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியாப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-110)

## குற்றக்கும்பல்...

குற்றக்கும்பல் உறுப்பினர்கள் நேற்று இரவு விமானம் மூலம் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

நாட்டில் இடம்பெற்ற பல்வேறு குற்றச் செயல்களின் பின்னணியில் செயற்பட்டனர் என்று கூறப்படும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்குழுக்களின் உறுப்பினர்கள் ஐவர் இலங்கைப் பொலிஸாரால் கடந்த வியாழக்கிழமை இந்தோனேசியாவில் கைதுசெய்யப்பட்டனர். அவர்களை நாட்டுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று இரவு அவர்கள் ஜகார்த்தாவில் இருந்து விமானம் மூலம் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளனர். (அ-எ-இ)




இவ்வகையான செயட்பாடுகளுக்கு மேலதிகமாக மேலும் தகவல்களை அறிந்துகொள்ள நீங்களும் **செப்டம்பர் 2 மற்றும் 3 ஆகிய** இரு தினங்களிலும் புதுகுடியிருப்பு மத்திய வித்தியாலய பூமியில் வந்து கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.மேலதிக தொடர்புகளுக்கு,

**நீங்களும் தென்னம்மட்டை / தென்னம்மட்டை துண்டுகள் சம்பந்தப்பட்ட தொழிற்சாலையில் தொழில் அதிபரா? அல்லது அது சம்பந்தப்பட்ட தொழிற்சாலை தொடர்பான தொழில்முனைவதற்கு ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டு இருப்பவரா?**

- மூலப்பொருட்கள் கொள்வனவு செய்வது தொடர்பாக தகவல் வழங்கல்
- தென்னம்மட்டை துண்டுகள் (chips) சம்பந்தமான மூலப் பொருட்கள் செய்வது தொடர்பான தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தல்
- ஆளுகை இல்ல நிர்மாணம், நடைமுறைபடுத்தல் (maintenance) மற்றும் முறையான பயிர் செய்கை தொடர்பான அறிவுரை வழங்கல்

RIOCOCO WORLDWIDE

Siyambalangamuwa, Kurunegala, Sri Lanka.
www.riococo.com
Sri Lanka Riococo
070 654 61 18
071 695 62 89
077 742 69 93
071 530 71 41

**அப்படியானால் எங்களுடன் சேருங்கள் RIOCOCO உடன்.**





முழுங்காவில் - நாச்சிக்குடா - கரடிக்குன்றில் தான்தோன்றியாய் எழுந்த

**பிரம்மம் ஆதிபராசக்தி நாகபூசணி அம்பாள் ஆலயம்**

**வருடாந்த உற்சவ விஞ்ஞாபனம் - 2025**

**அம்பாள் அடியார்களே!**

முழங்காவில் நாச்சிக்குடா கரடிக்குன்றில் தான் தோன்றியாக வீற்றிருக்கும் அன்னைபிரம்மம் ஆதிபராசக்தி நாகபூசணி அம்பாளின் வருடாந்த உற்சவம் நிகழும் மங்கலகரமான விசுவாவசு வருடம் ஆவணி மாதம் 16ம் நாள் (01.09.2025) திங்கட்கிழமை அன்னை அருளிய சுபவேளையாகிய நண்பகல் 12.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி புரட்டாதி மாதம் 10ம் நாள் (26.09.2025) வெள்ளிக்கிழமை காலை 06.00 மணிக்கு நிறைவுபெற அன்னையின் திருவருள் பாலித்துள்ளது.

**கொடிக்கம்பவிழா :** 31.08.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 07.00 மணிக்கு கொடிக்கம்ப விழா ஆலயத்தில் சிறப்பாக நடைபெறும்.

**புற்றுப்பூஜை :** 25.09.2025 வியாழக்கிழமை காலை 06.00 மணிக்கு அன்னை சுயம்பாக எழுந்துள்ள புற்று மண்டபத்தில் பூஜை ஆரம்பமாகி 26.09.2025 வெள்ளிக்கிழமை காலை 06.00 மணிக்கு நிறைவுபெறும். இது ஒரு விஷேட தொடர்பூஜை என்பது குறிப்பிடத்தக்கது.

**வீதியுலா :** 25.09.2025 வியாழக்கிழமை காலை 08.00 மணிக்கு அன்னை ஆலயத்திலிருந்து புறப்பட்டு 19ம் கட்டை வீதியூடாக வீதி உலா வந்து குமுழமுனை முத்துமாரி அம்மன் ஆலயம் சென்று அங்கிருந்து மீண்டும் ஆலய இருப்பிடத்திற்கு அன்னை வந்தடைவார்.

**உற்சவ காலத்தில் தினமும் அன்னதானம் இடம்பெறும்**

முக்கிய அறிவித்தல் : ஆலயத்திற்குள், ஆலயத்தின் வெளியே வீதியுலா வரும் அன்னையின் பீடத்தை தாங்கும் அடியவர்கள் அனைவரும் செவ்வாடை அணிந்திருத்தல் வேண்டும். (ஆண்கள் சிவப்பு வேட்டியும், பெண்கள் சிவப்பு சேலையும் அணிந்திருத்தல் கட்டாயமானதாகும்)

அடியார்களின் கவனத்திற்கு : ஆலயத்தின் திருப்பணி வேலைகளுக்கு உதவி செய்ய விரும்பும் அடியார்கள் உற்சவ காலத்தில் தங்களின் உதவிகளை வழங்க முடியும் என தெரிவித்துக்கொள்கின்றோம்.

**"ஓம் பிரம்மம்னே அம்மா உன் திருப்பாத கமலமே சரணம்"**

முழுங்காவில்
நாச்சிக்குடா

இங்ஙனம்
ஆலய ஆதீன சபையினர்

(AS304098) E



வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி
NCDB
Northern Co-operative Development Bank

# பதவி வெற்றிடம்

## தொழில்நுட்ப உத்தியோகத்தர் (Technical Officer)

எமது வங்கியானது வட மாகாணத்திலுள்ள கூட்டுறவுத்துறையின் சிறு உற்பத்தி தொழிற்சாலைகளின் மேம்பாட்டிற்காக திட்டமொன்றை முன்னெடுத்துள்ளது. இதன் நிமித்தம் ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தரை ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளது.

**தகைமைகள்**

1. கீழ் குறித்த தகைமைகள் அல்லது இணையான அனுபவம்
   - அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது தொழினுட்ப கல்வி நிறுவனம் ஒன்றில் NVQ – Level 5 இனை பூர்த்தி செய்திருத்தல்
   - NDT, HNDE, NDES mechanical (or manufacturing) engineering/ technology ல் தகைமை பெற்றிருத்தல்.
2. உற்பத்தி இயந்திரங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் அவற்றை திருத்துவது தொடர்பான அறிவு
3. உற்பத்தி இயந்திரங்கள், பொறித் தொகுதிகள் திருத்துவது தொடர்பாக குறைந்தது 2 வருட அனுபவம்
4. சிறந்த தொடர்பாடல் திறன்
5. வட மாகாணத்தின் எப்பாகத்திற்கும் தேவையேற்படின் பயணம் செய்யக்கூடியவராயிருத்தல்

**மேலதிக தகைமைகள்**

1. (சிறிய) உற்பத்தி தொழிற்சாலையில் வேலை செய்த அனுபவம்
2. கிளிநொச்சியையோ அதனை அண்டிய பகுதிகளையோ வதிவிடமாக கொண்டிருத்தல்

பொருத்தமான விண்ணப்பதாரிகள் தங்களது சுய விபரக் கோவையை, lk.ncdb@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

அல்லது

மனித வள முகாமையாளர், வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி, முதியோர் இல்ல வளாகம், கைதடி. எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்

விண்ணப்ப முடிவுத் திகதி : 15.09.2025

(CR 45946) E


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## விதை நெல் விற்பனைக்கு

தரமான விதைநெல் 384 வெள்ளை ரகம் (3 1/2 மாதம்)
தொடர்புகளுக்கு:-
கேணியடி வைரவர் கோவில் பின் வீடு, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
M.செல்வராஜா
076 119 3695
(CS/59234) J-1

## காணி விற்பனைக்கு

இராசபாதை வீதியின் ஓரமாக கோப்பாய் சந்தியில் இருந்து 100m தூரத்தில் 2 பரப்பும் 1 குழியும் காணி விற்பனைக்கு உண்டு.
077 132 3348
(CS 59257)

## ஆலய சேவை

பராமரிக்க முடியாத இந்து ஆலயங்கள் பராமரித்து பூசை செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு:
076 578 9372
(CS 3908) E

## வாடகைக்கு

யாழ் இந்துக்கல்லூரி அருகாமையில் 4 அறைகள் கொண்ட சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 292 8853
(CS/3920) J-1

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ 45 வயது சொந்தமாக தொழில்புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை
தொடர்பு: 077 905 8615

## விற்பனை பிரதிநிதி தேவை

யாழ் மாவட்டத்திற்கு Floor Tile விற்பனைப் பிரதிநிதி தேவை.
தொடர்புகளுக்கு
077 680 4085

# விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக. 31

உடுவில் பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா - 2025 ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. இறுதிநாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் நடைபெறவுள்ளதால் அனைவரையும் பங்கேற்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய
(ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். பிள்ளைகள்வழியில் வீண்செலவுகள் ஏற்படக்கூடும். வெளியிடங்களில் சாப்பிடுவதைத் தவிர்ப்பது நல்லது. மாலையில் வாழ்க்கைத்துணையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**இடபம்:** காலையில் சற்றுச்சோர்வாக இருக்கும். பிற்பகலுக்குமேல் உற்சாகமும் மகிழ்ச்சியும் ஏற்படும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**மிதுனம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு உகந்த நாள். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்ட சிறுசிறு பிணக்குகள் மறைந்து, அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். தந்தையின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். முக்கியமான முடிவுகளை ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது.

**சிம்மம்:** காலையில் வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாகமுடியும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். அலுவலகத்தில் பணி நெருக்கடி குறையும்.

**கன்னி:** எதிர்பாராத செலவுகள் ஏற்படும். ஆனால், போதுமான பணம் இருப்பதால் கடன் வாங்க வேண்டிய அவசியம் ஏற்படாது. நேரத்துக்குச் சாப்பிடமுடியாதபடி அலுவலகத்தில் பணிச்சுமை இருந்தாலும் சமாளித்து விடுவீர்கள்.

**துலாம்:** அதிர்ஷ்டகரமான நாள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக முடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத் துணை ஆதரவாக இருப்பார்.

**விருச்சிகம்:** தந்தைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். சகோதரர்களால் ஓரளவுக்கு நன்மை ஏற்படும்.

**தனுசு:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். பிற்பகலுக்கு மேல் உறவினர்கள் வருகையால் வீட்டில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து கொடுப்பீர்கள்.

**கும்பம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மீனம்:** இன்று எதிலும் சற்றுப் பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் அனுசரித்துச்செல்லவும்.



# ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் 'மீண்டும் ஒருநாள் பள்ளிக்கு'

யாழ்ப்பாணம், ஓக. 31

ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் 2000ஆம் ஆண்டு உயர்தரப் பிரிவு மாணவர்களின் 'மீண்டும் ஒருநாள் பள்ளிக்கு' என்ற நிகழ்வு நேற்றுக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வின் ஆரம்பத்தில் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள ஸ்கந்தன் ஆலயத்தில் வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டு 2000ஆம் ஆண்டு உயர்தரப் பிரிவு மாணவர்கள் தமக்குக் கற்பித்த ஆசிரியர்களுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

பின்னர் மறைந்த ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு, ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு நினைவஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து நண்பர்கள் அறிமுகம், ஆசிரியர்கள் கௌரவிப்பு, விருந்தினர்கள் உரை, ஆசிரியர்கள் உரை மற்றும் பள்ளி நினைவூட்டல்கள் என்பன இடம்பெற்றன. (ச-27)

# குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஓக.31

இணுவில் கிராமத்தைச் சேர்ந்த மறைந்த நண்பர்களான செ.ரிசாந், ச.யதுசன், கி.சிந்துஜன், யோ.சதீஸ், ஆ.சயந்தன் ஆகியோர் நினைவாக வருடாவருடம் இணுவில் பாலாவோடை இளைஞர்கள் நடத்தும் குருதிக்கொடை முகாம் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் இணுவில் அறிவாலய மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

நிகழ்வில்நண்பர்கள், உறவுகள் மற்றும் ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொண்டு குருதிக்கொடையை வழங்குமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-41-66)



# யாழ். மாவட்டத்தில் சதுரங்கப் போட்டி!

யாழ்ப்பாணம், ஓக. 31

யாழ். மாவட்ட இளைஞர் சம்மேளன இளைஞர்களுக்கான சதுரங்கப் போட்டி நேற்றுச் சனிக்கிழமை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட இளைஞர்கள் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

இந்தச் சுற்றுப்போட்டியில் யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச சம்மேளனங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட சதுரங்க விளையாட்டு வீரர்கள் பங்குபற்றினர். தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றம் வருடந்தோறும் இந்தச் சதுரங்க போட்டியை நடத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-27)

# யாழ். நாவலர் வீதியை அகலிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 31

யாழ்ப்பாணம் நாவலர் வீதியை அகலிக்கவேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

நல்லூர்ப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோதே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. நல்லூர்த் திருவிழாக் காலங்களில் கச்சேரி - நல்லூர் வீதியில் இருந்து இலுப்பையடிச் சந்தி வரையான வீதியில் சனநெரிசல் அதிகமாக இருப்பதால் அந்த வீதியை அகலிக்கவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது. இதன்போது சபையில் கருத்துத் தெரிவித்த யாழ். மாநகர முதல்வர், நல்லூர்த் திருவிழா காலங்களில் மட்டுமே நாவலர் வீதியில் சனநெரிசல் காணப்படுகின்றது. எனவே இதுதொடர்பாக ஆராய்ந்த பின்னரே முடிவெடுக்கமுடியும்- என்றார்.

அதற்குப் பதிலளித்த ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவர் ரஜீவன், இதுதொடர்பாக யாழ். மாநகரசபை அமர்வில் ஆராய்ந்து சிறந்த தீர்மானம் ஒன்று எடுக்கப்படும் - என்றார். (ச-26)

# விளையாட்டுக் கட்டடத்தொகுதி முல்லைத்தீவில் அமையுங்கள்

முல்லைத்தீவு, ஓக. 31


முல்லைத்தீவு மாவட்டத்திற்கென விளையாட்டுக் கட்டடத்தொகுதியொன்று தேவையென வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவில் தீர்மானமொன்றை முன்மொழிந்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் முன்வைத்த குறித்த தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், குறித்த தீர்மானத்தை உரிய தரப்பினருக்கு நடவடிக்கைக்காக அனுப்பிவைப்பதெனக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ச-26,246)

# அடிக்கல் நடுகை

கிளிநொச்சி ஓக. 31

கரைச்சிக் கிழக்கு கிராமிய மீனவர் அமைப்பின் தொழிலாளர்களுக்கான ஓய்வு மண்டபத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலக பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் இணைப்பாளர், கிராம சேவகர், கரைச்சிக் கிழக்குக் கிராமிய மீனவர் அமைப்பின் நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் தொழிலாளர்கள், சாந்தபுரம் சங்க அங்கத்தவர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (ச-40,113)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

எல்லா மனிதர்களையும் நம்பிவிடுவது ஆபத்து. ஒருவரையும் நம்பாமல் இருப்பது பேராபத்து.

ஆபிரஹாம் லிங்கன்

# வலியை உணர்ந்தும் வதைப்பது தகுமா...?


வடக்கு கிழக்கு மற்றும் தெற்கில் காணாமல் ஆக்கப்பட்ட பத்தாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் தொடர்பில் மீண்டும் விசாரணைகள் இடம்பெறும் என்றவாறாக அறிவித்திருக்கின்றார் நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார. காணாமல் ஆக்கப்படுதலின் வலி என்னவென்று, தற்போதைய அரசாங்கத்துக்குத் தெரியும். ஆதலால், இந்தப் பிரச்சினைகள் நீண்டு செல்ல அனுமதிக்கப் போவதில்லை என்றும் அவர் கூறியிருக்கின்றார். ஆனால், அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவின் கருத்துகள் மீது எந்தத் திருப்தியும் - நம்பிக்கையும் அற்றவர்களாகவே தமிழர்கள் காணப்படுகின்றனர். ஏனெனில், ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினுடைய செயற்பாடுகள் அவ்வாறுதான் அமைந்துள்ளன.

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான நேற்று, தமிழர் தாயகமான வடக்கு கிழக்கில், போராட்டங்களும் பேரணிகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அத்துடன், காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையும் அடிக்கடி அறிக்கையிட்டு வருகின்றது. செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள பேரவையின் அமர்விலும் இந்த விவகாரம் பிரதானம் பெறுவதற்கு சாத்தியங்கள் அதிகம் உள்ளன. எனவே, பதிலொன்றை வழங்க வேண்டிய கட்டாயத்தில் - தவிர்க்க முடியாத்தனத்தில்தான் அமைச்சரின் கூற்று அமைந்திருக்கின்றதே அன்றி, அதை வரவேற்கவும் பெரிதுபடுத்தவும் எதுவுமே இல்லை.

நீதி அமைச்சர் கூறியதைப்போன்று, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் வலி என்னவென்று தற்போதைய அரசாங்கத்துக்குத் தெரியும்தான். அதை மறுப்பதற்கில்லை. ஆனால், அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார கூறிய அதே கருத்துகளை ஜனாதிபதி அநுரவும் தேர்தல் காலத்தில் தெரிவித்திருக்கின்றார். அதுவும், தமிழ் மக்களின் முன்பாக நின்று அவர்களை நேருக்குநேர் பார்த்து 'உங்களின் வலி அறிவேன். ஆதலால், தீர்வை நிச்சயம் தருவேன்' என்று குறிப்பிட்டுள்ளார். எனினும், அதிகாரத்தைப் பொறுப்பேற்று பத்து மாதங்கள் கடக்கின்ற போதிலும் இதுவரை ஏற்கத்தக்க எந்த முன்னெடுப்பையும் ஜனாதிபதி அநுர மேற்கொண்டதாக இல்லை. எனவே, அமைச்சர் ஹர்ஷனவின் கருத்தை, 'ஓர் எதிர்ப்பலையைச் சமாளிப்பதற்கான தந்திரோபாய நகர்வு' என்று தமிழர்கள் கருதினால், அதில் தவறில்லை.

எல்லாவற்றையும்விட, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், 'இலங்கையில் போர்க் குற்றம் இடம்பெறவில்லை. போர்க் குற்றம் என்று கூறுவதே பெரும் தவறு' என்று அண்மையில் குறிப்பிட்டிருந்தார். ஆனால், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளோ, 'படையினரின் கைகளில் ஒப்படைக்கப்பட்ட தமது உறவுகள் எங்கே?' என்றுதான் வினவுகின்றனர். இந்த இரண்டு கூற்றுகளுக்கும் இடையிலான இடைவெளி மிகப்பெரியதும் முன்பின் முரணானதுமாகும். ஆதலால், இவற்றில் எந்த மனநிலையில் நின்றுகொண்டு அரசாங்கம் இந்த விடயத்தை அணுகப் போகின்றது என்ற தெளிவுபடுத்தலை வழங்க வேண்டும். தமிழர்களுக்குத் தேவை தீர்வு. மாறாக, அரசாங்கத்தின் மீதான அழுத்தக் குறைப்பு நடவடிக்கைகள் தமிழர்களுக்குத் தீர்வாக ஒருபோதும் அமையாது.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



# உரிய காலப்பகுதியில் பரீட்சைகளை நடத்துக



ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, ஓக.31

**2026 ஆம் ஆண்டு முதல் கல்விப் பொதுத்தராதர சாதாரண தர மற்றும் உயர்தரப் பரீட்சைகளை உரிய கால அட்டவணையில் நடத்துவற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.**

ஜனாதிபதி தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் 2026ஆம் ஆண்டுக் கானவரவு-செலவுத்திட்டபூர்வாங்கக் கலந்துரையாடலின் போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அனைத்து மாணவர்களுக்கும் தரமான கல்வியை உறுதிப்படுத்தும் வகையில் எமது நாட்டின் பாடசாலை கட்டமைப்பை முறைமைப்படுத்தல் மற்றும் பாடத்திட்டச் சீர்திருத்தம் ஆகியவற்றில் கவனம்செலுத்துமாறும், ஒவ்வொரு மாணவருக்கும் தரமான கல்வியை உறுதி செய்யும் வகையில், அரசாங்கத்தின் கல்வி சீர்திருத்தங்களின் விரும்பிய இலக்குகளை அடையத் தேவையான முதலீடுகளைச் செய்யுமாறும் கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அறிவுறுத்தினார். (ச-இ)

## உச்சத்தில் சூரியன்

கொழும்பு, ஓக.31

நாட்டில் பகல் வேளையில் சூரியன் நேரடியாக உச்சம் கொடுக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, வங்காலை , ஓமந்தை, வேதமகிழங்குளம், கேலபொகஸ்வெவ மற்றும் திரியாய் ஆகிய பகுதிகளில் சூரியன் உச்சம் கொடுக்கவுள்ளது. இதே வேளை, சூரியனின் தெற்கு நோக்கிய நகர்வு காரணமாக, ஓகஸ்ட் 28 முதல் செப்ரெம்பர் 7ஆம் திகதி வரை இலங்கையின் அட்ச ரேகைகளுக்கு நேரடியாக சூரியன் உச்சம் கொடுக்கவுள்ளது. என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

## எயார்லைன்ஸ் சிறப்புச் சலுகை

கொழும்பு, ஓக.31

சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தினூடாக சிறப்புச் சலுகைகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் 46ஆவது நிறைவாண்டை கொண்டாடும் விதமாக இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அதனடிப்படையில், செப்ரெம்பர் முதலாம் திகதி முதல் ஐந்தாம் திகதி வரை இந்தச் சலுகைகள் வழங்கப்படவுள்ளன. இந்தச் சலுகைகள் அனைத்தும் சிறிலங்கன் எயார்லைன்ஸின் உத்தியோகபூர்வ வலைத்தளம்மூலம் டிக்கெட் வாங்கும் பயணிகளுக்கு மாத்திரமே வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)




## யானை தாக்கி ஒருவர் பலி

கொழும்பு, ஓக.31

திருகோணமலை, சேருநுவரப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தங்கநகர் பகுதியில் யானை தாக்கியதில் நபரொருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

தங்கநகர்ப் பகுதியைச் சேர்ந்த 58 வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ச-இ)

# இலங்கைக் குற்றக்கும்பலை அழைத்துவரப் பொலிஸ் குழு

கொழும்பு, ஓக.31

இந்தோனேசியாவில் கைதுசெய்யப்பட்ட பாதாள உலகக் கும்பலை இலங்கைக்கு அழைத்துவருவதற்காக விசேட பொலிஸ் குழு ஒன்று இந்தோனேசியாவுக்குச் சென்றுள்ளது.


குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் இந்தோனேசியா பொலிஸாரால் 7 நாள்களாக மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது கெஹெல்பத்தார பத்மே', 'கொமாண்டோ சலிந்த' மற்றும் 'பாணந்துறை நிலங்க' உள்ளிட்ட 6 பேர் அடங்கிய பாதாள உலகக் கும்பல் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

நாளை
திங்கட்கிழமை - ஆவணி 16
01.09.2025
சுபநேரம் : 12.05 - 01.35
ராகுகாலம் : 07.35 - 09.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்ட அபிவிருத்திக்கு கூடுதலான நிதி ஒதுக்கப்படும்

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஓக. 31**
**யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக்குக் கூடுதலான நிதி ஒதுக்கப்படும் என்றும், வீதி அபிவிருத்திக்கு மேலதிக நிதி விடுவிக்கப்பட்டுள்ளது என்றும் கடற்றொழில் அமைச்சரும், யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவருமான இ.சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது-
ஜனாதிபதி பதவியேற்று ஒரு வருடம் நிறைவடையவுள்ளது. வாக்களித்த மக்களின் எதிர்பார்ப்புகளை அரசாங்கம் நிச்சயம் நிறைவேற்றும். அதற்கு அரசாங்க உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பு அவசியம்.
நாட்டின் டொலர் நிலைவரம் தற்போது சீராகவுள்ளது. நாடு தற்போது அபிவிருத்திப் பாதையில் செல்கின்றது. பெரியளவிலான அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படும் -என்றார்.
இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்டத்துக்கான தேவைகள் தொடர்பாகவும், அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. (ஏ-66)



## மூலிகைப் பயிர்ச்செய்கை விசேட கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஓக. 31
தேசிய மூலிகைப் பயிர்செய்கைத் திட்டம் மற்றும் மூலிகை சேகரிப்புத் திட்டங்கள் தொடர்பில் வட மாகாண சுதேச வைத்தியர்களுக்கான கலந்துரையாடல் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. குறித்த திட்டத்தின் இணைப்பாளர் சட்டத்தரணி சமந்தா கோரலோராச்சி தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.
கலந்துரையாடலில் வடமாகாண சுதேச வைத்தியத் திணைக்கள ஆணையாளர் வைத்தியர் தி.சர்வானந்தன், கொழும்பு மாவட்டச் சுதேச திணைக்கள சமுதாய மருத்துவர் விக்கும் சந்திரத்ன, யாழ் பல்கலைக்கழக சித்த வைத்தியத்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் நவலக்சுமி, தேசிய மக்கள் சக்தியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் மருங்கன் மோகன் மற்றும் பிரதேசசபை உறுப்பினர்கள உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (ச-40.113)



தாவடி ஸ்ரீ அம்பலவாண வேதவிநாயகர் ஆலய ஆவணிச் சதுர்த்தி உற்சவம் கடந்த புதன்கிழமை மாலை பக்திபூர்வமாக நடைபெற்றது. இதன்போது விநாயகப்பெருமான் உள்வீதியுலா வந்ததைத் தொடர்ந்து மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட அழகிய திருமஞ்சத்தில் ஆரோகணித்து ஆலய வெளிவீதியில் அடியவர்கள் புடைசூழப் பவனி வந்தார். (ச-41-66)

## திருக்குறள் போட்டி பரிசில்கள் வழங்கல்

யாழ்ப்பாணம், ஓக. 31
தச்சன்தோப்புக் கந்தையா கனகம்மா நிதியத்தினால் தென்மராட்சி தெற்குப்பகுதியிலுள்ள பாடசாலைகளின் மாணவர்களிடையே நடத்தப்பட்ட திருக்குறள் மனனப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குக் கடந்த திங்கட்கிழமை பரிசில்கள் வழங்கிவைக்கப்பட்டதாக நிதியத்தின் காப்பாளர் க.மயில்வாகனம் தெரிவித்தார். (ச-25, 131)



## சாவகச்சேரி ப.நோ.கூ.சங்க கிளைக் கட்டடத்துக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம், ஓக. 31
சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் மட்டுவில் வடக்கு 10ஆம் இலக்கக் கிளை வியாபார நிலையத்துக்கான அடிக்கல் நடுகைசெய்யும் நிகழ்வு மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலுக்கு அருகில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.
நிகழ்வில் சங்கத்தின் பொதுமுகாமையாளர் யோ. தெய்வேந்திரன், சங்கத் தலைவர் கு.ஜனகன் ஆகியோர் அடிக்கல்லை நடுகைசெய்தனர். புதிய கட்டடத்துக்கான காணியை மட்டுவில் வடக்கைச் சேர்ந்த நன்கொடையாளர் சின்னத்தம்பி பொன்னம்பலம் அவரது மகளான அமரர் கௌரிதேவி ஞாபகார்த்தமாக வழங்கிவைத்தார். (ச-25, 131)



படங்கள் ஐ. சிவசாந்தன்

நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் ஆவணிச் சதுர்த்தி நாளான கடந்த புதன்கிழமை விநாயகப்பெருமான் உள்வீதி, வெளிவீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

## வில்சன் சனசமூக நிலையத்தால் கழிவகற்றல் பணி முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஓக. 31
மட்டுவில் கிழக்கு வில்சன் சனசமூக நிலையத்தினரால் உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மட்டுவில் கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுப் பகுதியில் கழிவகற்றல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.
சாவகச்சேரிப் பிரதேசசபையின் வாகனத்தின் உதவியுடன் திண்மக் கழிவுப்பொருள்கள் சேகரிக்கப்பட்டு அகற்றப்பட்டன. (ச-25, 131)



சாவகச்சேரி நகராட்சிமன்றின் சுமார் 6 மில்லியன் ரூபா நிதியில் மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகளோடு அமைக்கப்பட்ட நவீன மலசல கூடத்தொகுதி பாவனைக்காக அண்மையில் கையளிக்கப்பட்டுள்ளது. (ச- 28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெடுந்தீவுப் பிரதேச செயலராக என்.பிரபாகரன் பொறுப்பேற்பு

யாழ்ப்பாணம், ஓக. 31
நெடுந்தீவுப் பிரதேச செயலராக என்.பிரபாகரன் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். நெடுந்தீவுப் பிரதேச செயலராகக் கடமையாற்றிய திருமதி நிவேதிதா கேதீசன் வடமாகாண பிரதி அஞ்சல் மா அதிபராக இடமாற்றம் பெற்றுச் செல்லவுள்ள நிலையில் இந்த நியமனம் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. (ச-25,9)

# உள்ளூராட்சி நிர்வாகத்தில் பெரும் ஊழல், மோசடிகள்!

*இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சுட்டிக்காட்டு*

**கொழும்பு, ஓக.31**

**உள்ளூராட்சிச்சபை நிர்வாகத்தில் பெரியளவிலான இலஞ்சம் மற்றும் ஊழல் மோசடிகள் இடம்பெறுகின்றன. பொதுமக்கள் உள்ளூராட்சிச்சபைகளுக்குச் செல்லும்போது அவர்களுக்கான சேவை வழங்கல் தாமதப்படுத்தப்படுகிறது. பின்னர் இலஞ்சம் கோரப்படுகிறது. உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் பொறுப்புடன் செயற்படவேண்டும்.**

இவ்வாறு இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பாக நாட்டு மக்களுக்குத் தெளிவுப்படுத்தவேண்டும்.
ஊழல்வாதிகளைப் பிடித்து அவர்களைச் சிறைக்கு அனுப்பினால் மாத்திரம் ஊழலை இல்லாதொழிக்கமுடியாது. பிரச்சினை எங்குள்ளது என்பதை விளங்கிக்கொண்டுள்ளோம்.
இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிராக ஒன்றுபடுமாறுஒட்டுமொத்த மக்களுக்கும் அறிவுறுத்தவேண்டும்.
எமக்குப் பொறுப்புகளை வழங்கியதன் பின்னர் தமக்கு எவ்விதப் பொறுப்புமில்லை என்று மக்கள் கருதுகிறார்கள். அவ்வாறு இல்லை. ஊழலுக்கு எதிராகச் செயற்படுவது ஒட்டுமொத்த மக்களின் சமூகப்பணியாகும்.
உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் பொறுப்புடன் செயற்படவேண்டும். மக்கள் பிரதிநிதிகள் என்ற அடிப்படையில் ஊழலற்ற நிர்வாகக் கட்டமைப்பை உள்ளூராட்சி மன்றங்களில் அவர்கள் ஏற்படுத்தவேண்டும்.
- என்றார். (எ-இ)



தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சிறுவர் கழகங்களை வலுப்படுத்தல் தொடர்பான பயிற்சிச் செயலமர்வு பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் வளவாளர்களாக பிரதேசசெயலக சிறுவர் பிரிவு உத்தியோகத்தர்களான எம்.சுரேஸ்வரன் மற்றும் எஸ்.எம்.ஈ.பிறிட்யேட் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25, 9)



நீர்வேலி அரச கேசரிப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 12 நாள்கள் நடைபெறும். (ச-25, 17)

## புதிய தலைவர் தெரிவு

யாழ்ப்பாணம், ஓக. 31
தென்மராட்சிக் கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர் சபையின் 2025ஆம் ஆண்டுக்கான புதிய தலைவராக கந்தசாமி கோடீஸ்வரன் தெரிவுசெய்யப்பட்டார்.
அவர் கடந்த வியாழக்கிழமை மாலை அகில இலங்கை சமாதான நீதிவானும் சாவகச்சேரிப் பிரதேசசபை உறுப்பினருமான செ. மயூரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார். (ச-28)



# கச்சதீவின் மீட்பராகினார் வரலாறு தெரியாத விஜய்

*இலங்கைக் கடற்றொழிலாளர் சமாசத்தின் தலைவர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஓக. 31
தமிழக வெற்றிக்கழகத்தின் தலைவர் விஜய் கச்சதீவு இந்தியாவுக்குச் சொந்தம் எனக் கூறியுள்ளார். இந்த விடயத்தில் விஜய் வரலாறு படித்திருக்கவேண்டும். இது காலத்துக்குக் காலம் அரசியல் இலாபம் கருதி தமிழ்நாட்டு மீனவ மக்களை ஏமாற்றுவதற்கும் அவர்களுடைய வாக்குகளைப் பெறுவதற்கும் செய்யப்படுகின்ற நாடகம்.
இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் தலைவர் என்.வி.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
கடந்த சில தினங்களுக்கு முன்னர் மதுரையில் நடைபெற்ற தமிழக வெற்றிக் கழகத்தின் மாநாட்டில் அந்தக்கட்சியின் தலைவரான விஜய், கச்சதீவு இந்தியாவுக்குச் சொந்தம் எனக் கூறியுள்ளார். இந்த விடயம் கவலையாக இருந்தாலும் இது காலத்துக்குக் காலம் அரசியல் இலாபம் கருதி பெரிய பெரிய கட்சிகள் தமிழ்நாட்டு மீனவ மக்களை ஏமாற்றுவதற்கும் அவர்களுடைய வாக்குகளைப் பெறுவதற்கும் செய்யப்படுகின்ற நாடகம்.
விஜய், இலங்கை - இந்தியாவிடையே செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பான கருத்துகளைக் கேட்டு அறியாமல் கச்சதீவு இந்தியாவுக்குச் சொந்தமென சொல்லியிருக்கின்றமை தமிழ்நாட்டு மீனவ மக்களை ஏமாற்றுகின்ற செயற்பாடு.
பழம்பெரும் அரசியற் தலைவர்களுக்கும் தெரியும் கச்சதீவை இலங்கையிடமிருந்து மீட்கமுடியாது என்று கச்சதீவு விடயத்தை அரசியலாக்கித் தமிழக மீனவர்களுடைய வாக்குகளைப் பெற்றுக்கொள்வதே அவர்களுடைய நோக்கம். அதைத்தவிர இதில் வேறு எதுவும் கிடையாது
முடிந்தால் மத்திய அரசுடன் விஜய் பேசி, அவர்கள் மூலமாக எங்களுடன் பேச்சுக்கு வந்து எமது நாட்டின் ஒரு பகுதியான கச்சதீவைத் தருமாறு கேட்கலாமேதவிர மீட்கமுடியாது என்பதை விஜய் புரிந்துகொள்ளவேண்டும்- என்றார். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு மாணவர்களுக்கு புதிய விசாக் கட்டுப்பாடுகள்

## அமெரிக்கா அறிவிப்பு

வொஷிங்டன், ஓக. 31

அமெரிக்காவில் படிக்க விரும்பும் வெளிநாட்டு மாணவர்களுக்குப் புதிய விசாவில் கட்டுப்பாடுகளை கொண்டுவர ட்ரம்ப் நிர்வாகம் முடிவு செய்துள்ளது.




அதன்படி, வெளிநாட்டு மாணவர்கள், தொழிலாளர்கள், வெளிநாட்டு ஊடகப்பிரதிநிதிகளுக்கான விசா வைத்திருப்பவர்கள் அமெரிக்காவில் தங்க அனுமதிக்கப்படும் கால அளவு கட்டுப்படுத்தப்படும். இந்தப் புதிய விதியை உள்நாட்டுப் பாதுகாப்புத்துறை முன்மொழிந்து உள்ளது. சட்ட விரோதமாகத் தங்குபவர்களைக் கண்டுபிடிக்கவும், மோசடிகளைத் தடுக்கவும் இந்த மாற்றம் தேவை என்று உள்நாட்டுப் பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது. சர்வதேச மாணவர்கள் விசா (எப்) மற்றும் கலாசாரப் பரிமாற்றத் திட்டங்களில் பார்வையாளர்கள் அமெரிக்காவில் பணிபுரிய அனுமதிக்கும் விசாக்களுக்கு (ஜெ) இனி அதிகபட்சமாக 4 ஆண்டுகள் தங்கியிருக்க கால அவகாசம் கொடுக்கப்படும். கால அவகாசத்தை நீடிக்க விண்ணப்பிக்கவேண்டும். அதேபோல் வெளிநாட்டு மாணவர்கள் படிப்பு முடிந்த பிறகு வேலைதேட 60 நாள்கள் அவகாசம் கொடுக்கப்பட்டது. அந்த அவகாசம் 30 நாள்களாகக் குறைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# நைஜீரியாவில் கொலராத் தொற்றால் 11 பேர் உயிரிழப்பு

அபுஜா, ஓக. 31

வடமேற்கு நைஜீரியாவில் கொலராத் தொற்றினால் 11 பேர் உயிரிழந்துள்ளனர். 200 இற்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அந்த நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த மாவட்டத்தில் இருக்கும் கிராமங்கள் மற்றும் சேரிகளில் சுத்தமான நீர் கிடைக்காமையால் இந்த நோய் பரவுவதாகக் கூறப்படுகிறது.

அதிகளவான உயிர்களை இழப்பதற்கு முன்பு அவசரகால மீட்புக்குழுக்கள் மற்றும் கொலராச் சிகிச்சை மையங்களை குறித்த கிராமங்களில் அமைக்கும்படி வலியுறுத்தப்பட்டுவருகின்றது. (ச-இ)

# ரஷ்யாவில் எரிபொருள் தட்டுப்பாடு


கொழும்பு, ஓக. 31

ரஷ்யாமீது உக்ரைன் இராணுவத்தினர் அதிநவீன ஆளில்லா விமானங்களை ஏவி தொடர் தாக்குதல் நடத்திவரும் நிலையில் ரஷ்யாவில் பெற்றோல், டீசலுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உக்ரைன் - ரஷ்யா இடையே போர் தொடங்கி 3 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வருகிறது.

இந்தப்போரை முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உட்பட உலகநாடுகளின் தலைவர்கள் பேச்சு நடத்திவரும் நிலையில் போரின் தீவிரம் குறையாமல் தொடர்ந்துவருகிறது.

இந்த நிலையில் ரஷ்யாமீது உக்ரைன் இராணுவத்தினர் அதிநவீன ஆளில்லா விமானங்களை ஏவி தொடர் தாக்குதல் நடத்திவருகின்றனர். குறிப்பாக ரஷ்யாவின் எண்ணெய்க் கிணறுகள், சுத்திகரிப்பு ஆலைகள் மற்றும் பெற்றோல் பங்குகளைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தப்படுவதால் ரஷ்யாவில் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)



## செல்பி எடுப்பதற்கு

# ஆபத்தான நாடுகள் பட்டியலில் இந்தியா

புதுடில்லி, ஓக. 31

செல்பி எடுப்பதற்கு ஆபத்தான நாடுகள் பட்டியலில் இந்தியா முதலிடத்திலும், அமெரிக்கா இரண்டாவது இடத்திலும் உள்ளது. அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில் உள்ள 'தி பார்பர்' சட்ட நிறுவனம், கடந்த 2014 முதல் 2025 மே மாதம் வரை செல்பி எடுக்கும்போது ஏற்பட்டுள்ள உயிரிழப்புகள் மற்றும் காயங்களைக் கண்காணித்து ஆய்வு நடத்தியது. இந்த ஆய்வு, செல்பிஎடுக்க நேரடியாக முயற்சித்து மரணத்தை விளைவிக்கும் நிகழ்வுகள் குறித்து செய்திகள் மற்றும் கட்டுரைகளை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்டது. இதில் உலகளவில் பதிவான அனைத்து நிகழ்வுகளில் 42.1 சதவீதம் இந்தியாவில் நிகழ்ந்துள்ளதாகக் கூறப்படுகிறது. இதன்படி உலகில் செல்பிஎடுப்பதற்கு ஆபத்தான நாடுகள் பட்டியலில் இந்தியா முதலிடத்திலும், அமெரிக்கா இரண்டாவது இடத்திலும் உள்ளதாகத் தெரியவந்துள்ளது. (ச-இ)

# காஸாவில் பட்டினிச் சாவு 303 ஆக உயர்வு

காஸா, ஓக. 31

இஸ்ரேலின் முற்றுகையால் காஸாவில் பட்டினி மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாடுகளால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 303 ஆக உயர்ந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது குறித்து காஸா சுகாதாரத்துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் , இது தவிர, காஸா முழுவதும் இஸ்ரேல் கடந்த 24 மணி நேரமாக நடத்திய தாக்குதலில் 75 பேர் உயிரிழந்தனர்.

இதில், உணவுப் பொருள் வாங்குவதற்காக விநியோக மையத்துக்கு வந்த 17 பேரும் அடங்குவர் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ளது. (ச-இ)

# உக்ரைன் போர்க்கப்பலை தரைமட்டமாக்கிய ரஷ்யா

மொஸ்கோ, ஓக. 31

உக்ரைன் கடற்படையின் மிகப்பெரிய போர்க்கப்பலான சிம்பெரோபோல் ரஷ்யாவின் ட்ரோன் தாக்குதலில் தாக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.


குறித்த தகவலை ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது.

உக்ரைனின் ஒடேசா பிராந்தியத்திற்கு அருகே உள்ள டான்யூப் ஆற்றின் முகத்துவாரத்தில் இந்தத் தாக்குதல் நடந்ததாகக் கூறப்படுகிறது.

கப்பல் தாக்கப்பட்டதை உக்ரைன் அதிகாரிகள் உறுதிப்படுத்தினர். இந்தத் தாக்குதலில் ஒரு பணியாளர் கொல்லப்பட்டதாகவும் மற்றும் பலர் காயமடைந்தனர் என்றும் உக்ரைன் கடற்படை செய்தித்தளம் தெரிவித்துள்ளது. (ச-இ)



# ஈரானுடன் உறவை முறிக்கும் ஆஸி.



சிட்னி, ஓக. 31

ஈரான் அரசுடனான அனைத்து இராஜதந்திர உறவுகளையும் முறித்துக் கொள்வதாக, அவுஸ்திரேலிய அரசு அறிவித்துள்ளது.

அவுஸ்திரேலியாவின், சிட்னி நகரத்தில் அமைந்திருந்த யூதர்களின் உணவகத்தின்மீது கடந்த 2024 ஒக்ரோபரிலும், மெல்போர்ன் நகரத்தில் யூதக் கோயில்மீது கடந்த 2024 டிசெம்பரிலும், தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இந்தத் தாக்குதல்களை, ஈரான் அரசுதான் இயக்கியுள்ளது என்பதற்கு போதுமான ஆதாரங்களை அவுஸ்திரேலியாவின் புலனாய்வுத்துறை திரட்டியுள்ளதாக, அவுஸ்திரேலியப் பிரதமர் அந்தோனி அல்பானீஸ் தெரிவித்துள்ளார். இதனைத் தொடர்ந்தே, ஈரானுடனான அனைத்து இராஜதந்திர உறவுகளும் முறிக்கப்படுவதாக அவர் கூறியுள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர் சடலமாக மீட்பு

கொழும்பு, ஓக. 31
மட்டக்களப்பு - காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மண்முனைப் பாலத்தின் கீழுள்ள வாவியில் மீன் பிடிக்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.
உயிரிழந்தவர் கோயில் குளம் பகுதியைச் சேர்ந்த, 49 வயதுடையவர் எனப் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளை காத்தான்குடிப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)

# ஜனநாயகத்தை வலுப்படுத்த ஒத்துழைப்பை வழங்குவோம்

## எதிர்க்கட்சி தெரிவிப்பு

**கொழும்பு, ஓக.31**
**ஜனநாயகத்தை வலுப்படுத்துவதும் அரசியல் துன்புறுத்தலை நிறுத்துவதுமே எமது பயணத்தின் நோக்கமாகும். இதன் ஊடாக நாட்டில் ஊழல், மோசடிகளை ஒழிக்கும் செயன்முறைக்கு ஒத்துழைப்பை வழங்குவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்களுடனான சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
ஊழல், மோசடிக்கு எதிராக நாமே முதலில் உயர் நீதிமன்றத்துக்குச் சென்றோம். நாட்டையே வங்குரோத்தயடைச் செய்தமைக்கு அடிப்படை உரிமை மீறல் வழக்கினை ஐக்கிய மக்கள் சக்தியே தாக்கல் செய்து தீர்ப்புகளைப் பெற்றுக்கொண்டது. ஊழல் வாதிகள் எம்மிடம் இல்லை என்று கூறி அரசாங்கமும், அரச தரப்பினரும் தாம் தூய்மையானவர்கள் எனக் காண்பிக்க முயற்சிக்கின்றனர்.
ஐக்கிய மக்கள் சக்தி அடக்குமுறை மற்றும் அச்சுறுத்தல்களை தெளிவாகவே எதிர்க்கிறது. அடிப்படை உரிமைகள் அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.
பேச்சுச் சுதந்திரம், அரசியல் செயற்பாட்டுச் சுதந்திரம், மதச் சுதந்திரம் மற்றும் கலாசார சுதந்திரம் போன்றன காணப்படுகின்றன. இந்த அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க அனைவரும் ஒன்றுபட்டுள்ளனர் - என்றார். (ச-இ)

# பழிவாங்கல்களை விடுத்து பாதுகாப்பை உறுதிசெய்க

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 31
எதிர்க்கட்சிகள் மீதான அரசியல் பழிவாங்கலை விடுத்து பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க வலியுறுத்தியுள்ளார்.
கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
அரசாங்கத்தின் அடக்குமுறைகளை ஒழிப்பதற்கு பல்வேறு கட்சிகளுடன் இணைந்து செயற்படுகின்றோம். அரசாங்கம் அதன் ஊழல், மோசடிகளை மறைப்பதற்காக அதிகாரத்தைப் பயன்படுத்த முயற்சிக்கிறது. இவ்வாறு அரசாங்கத்தின் அதிகார துஷ்பிரயோகத்துக்கு எதிராகவும் நாம் ஒன்றிணைந்து குரல் கொடுப்போம்.
அரசியல் பழிவாங்கல்களில் மாத்திரமே அரசாங்கம் அவதானம் செலுத்திவருகிறது. அதனை விடுத்து நாட்டில் இடம்பெறும் குற்றச்செயல்களைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது? எனவே அரசியல் பழிவாங்கலை விடுத்து மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றார். (ச-இ)





# பருத்தித்துறையில் பொலித்தீனுக்குத் தடை!

யாழ்ப்பாணம், ஓக. 31



பருத்தித்துறைப் பிரதேசசபை சபை எல்லைக்குள் மூன்று மாதத்துக்குள் பொலித்தீன் பாவனையை முற்றாகக் கட்டுப்படுத்துவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.
பருத்தித்துறைப் பிரதேசசபையின் மாதாந்த அமர்வு நேற்றுமுன்தினம் சபைத் தவிசாளர் யுகதீஸ் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் பனை விதை நடுகை மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டு 10 ஆயிரம் பனை விதைகள் நடுவதென்று தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் சபை எல்லைக்குள் மூன்று மாதத்திற்குள் பொலித்தீன் பாவனையை முற்றாகக் கட்டுப்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.
மேலும் உக்காத கழிவுப் பொருள்களைப் பருத்தித்துறை பிரதேசசபைக்குட்பட்ட இடத்தில் கொட்டுவதற்கு அனுமதி கோரப்பட்ட நிலையில் மூன்று மாத காலங்களுக்கு சுழற்சிமுறையில் அனுமதி கொடுப்பதாகவும் ஒரு உழவு இயந்திர பெட்டிக் குப்பைக்கு ரூபா 5000 அறவிடவும் தீர்மானிக்கப்பட்டது. (ச-27)

# உப்புக்கேணிக்குளம் சீரமைப்பு நிதியைக் கைமாற்றவில்லை

யாழ்ப்பாணம், ஓக. 31
சாவகச்சேரி நகராட்சிமன்ற எல்லைக்குள் உள்ள பழமைவாய்ந்த உப்புக்கேணிக் குளத்தின் புனரமைப்பு பணிகளுக்கென ஒதுக்கப்பட்ட நிதி மாற்றப்பட்டுள்ளதாகக் கூறப்படுவது உண்மைக்குப் புறம்பானது என சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் வ. சிறிபிரகாஸ் தெரிவித்துள்ளார்
அவர் மேலும் தெரிவிக்கையில்,
கடந்த வருடம் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின் போது குறித்த பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தார்கள் என்பது யாவரும் அறிந்ததே. இந்த நிலையில் எமது சபையின் முன்னைய செயலாளரினால் மக்கள் நலன்கருதி வரவு-செலவுத் திட்டத்தில் லிகோரியா வீதி வடிகால் அமைப்பதற்கென 7 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருந்தது.
இருப்பினும் உப்புக்கேணிக் குளத்து நீரை லிகோரியா வீதி ஊடாக வெளியேற்றமுடியாது என சிலரினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதற்கமைய இறுதி வரவு - செலவுத் திட்டத்தில் லிகோரியா வீதி நீக்கப்பட்டது. இந்த நிலையில் சபை முதல் அமர்வில் கோவில் குடியிருப்புத் தரைப்பகுதி வட்டார உறுப்பினர் பிரவணராசா அனர்த்த காலத்தில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு உப்புக்கேணிக் குளத்தை தூர்வாரிக்கொடுக்க வேண்டுமென முன்வைத்த கோரிக்கைக்கு அனைத்து உறுப்பினர்களின் ஆதரவுடன் நிதி ஒதுக்கப்பட்டு 5 நாள்கள் தூர்வாரும் பணி நடைபெற்று முடிவடைந்துள்ளது. எனவே ஒதுக்கிய நிதியை மாற்றியதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு ஆதாரமற்றது - என்றார். (ச-25, 28)

# உணவுப் பாதுகாப்பு யாழில் செயலமர்வு



யாழ். மாவட்ட உணவுப் பாதுகாப்பு வலையமைப்பை மேம்படுத்தல் தொடர்பான செயலமர்வு யாழ். மாவட்டச் செயலர் ம. பிரதீபன் தலைமையில் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. செயலமர்வில் அமைச்சின் உதவிப் பணிப்பாளர், யாழ். மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர், மாவட்டப் புள்ளிவிபரப் பிரதிப் பணிப்பாளர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், உலக உணவுத்திட்ட அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-25, 66)

# ஆன்மிக உரையும் சைக்கிள் வழங்கலும்

யாழ்ப்பாணம், ஓக. 31
வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஆன்மிக உரை நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.
நிகழ்வில் [illegible] திருமதி [illegible] அமிர்தகலா கலந்துகொண்டு "அன்பும் அருளும்" எனும் தலைப்பில் ஆன்மிக உரை ஆற்றினார். நிகழ்வில் அல்வாய் வடக்குப் பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவியொருவருக்கும், கிளிநொச்சி பொன்னகர் மத்திப் பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவன், மாணவி ஆகியோருக்கும் மொத்தமாக ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 550 ரூபா பெறுமதியான மூன்று புதிய துவிச்சக்கரவண்டிகள் சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால் வழங்கப்பட்டன. (ச-41-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹெரோய்னுடன் 2 பெண்கள் கைது

கொழும்பு, ஓக.31

கொழும்பு மத்திய பிரிவு குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் இரண்டு பெண்களைக் கைதுசெய்துள்ளனர். அவர்களிடமிருந்து 3.99 கிலோகிராம் மற்றும் 106 கிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளன. சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்திய போது செப்ரெம்பர் 2ஆம் திகதி வரை தடுப்புக்காவலில் வைத்து விசாரிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

(ச-இ)

## மரண அறிவித்தல்



### திருமதி இராஜஇராஜேஸ்வரி பொன்னம்பலம்

மலேசியாவை பிறப்பிடமாகவும், காரைநகர் சம்பந்தர் கண்டியை வசிப்பிடமாகவும், தற்போது கனடாவில் வசித்தவருமாகிய திருமதி இராஜஇராஜேஸ்வரி அவர்கள் தனது 95 வது அகவையில் இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் ஓய்வுபெற்ற இலங்கை நிலஅளவை திணைக்கள உதவி அத்தியட்சகர் அமரர் பொன்னம்பலத்தின் பாரியாரும், காரைநகர் சம்பந்தர் கண்டியை சேர்ந்த அமரர் அருணாசலம், நாகலிங்கம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், அமரர் ஆறுமுகம் தம்பதியரின் மருமகளும், அமரர் குமாரசாமி (மலேசியா), சுந்தராஜன், சுந்தரலிங்கம், விஜயலட்சுமி மற்றும் குஞ்சிதபாதம் (கனடா), பாலகிருஷ்னன், (சம்பந்தர் கண்டி) ஆகியோரின் சகோதரியும், பேராசிரியர் இரகுபதி, திருப்பதி, செந்தூர்பதி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (30-08-2025) சனிக்கிழமை கனடாவில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
நா. பாலகிருஷ்ணன் - சகோதரன்
சம்பந்தர் கண்டி காரைநகர்
074 071 0123

## பணியாளர்கள் தேவை

கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்திற்கு பணியாளர்கள் தேவையாக உள்ளது

**பணிநிலை வெற்றிடங்கள்**

1. கறவை பசுப்பண்ணை பராமரிப்பாளர் ஆண்
2. சமையலாளர் - (ஆண், பெண்)

**பணிகளுக்கான தகைமைகள்**

1. வயதெல்லை 25 - 60 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
2. தொழில் முன் அனுபவம் கொண்டவர்கள் விரும்பத்தக்கது
3. நல்ல உடல் உள ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும்
4. தங்கியிருந்து கடமையாற்றுவதற்கு விரும்புவோர் முன்னுரிமைப் படுத்தப்படுவார்கள்.

குறித்த பகுதிகளில் கடமையாற்ற விரும்புவர்கள் எதிர்வரும் 10.09.2025 இற்கு முன்னர் தங்களது சுயவிபரத்தினை தொலைபேசி மூலமாகவோ அல்லது கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு வருகைதந்தோ வழங்க முடியும்.

குறிப்பு :- சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படுவதோடு, கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
தங்குமிடம், உணவு இலவசமாக வழங்கப்படும்.

தொடர்பு முகவரி
ச.மோகனபவன்
தலைவர்
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்
ஜெயந்திநகர்,கிளிநொச்சி 0214923118 / 0773240950

(CR/45960) J-1

## மரண அறிவித்தல்



அன்னை மடியில்
05 . 03 . 1949

ஆண்டவன் அழைப்பில்
29 . 08 . 2025

### அமரர் திருமதி விக்னேஸ்வரி முனிஜயா

உடுப்பிட்டி "பொன்பதி" யைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விக்னேஸ்வரி முனிஜயா அவர்கள் கடந்த (29.08.2025) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - அழகாம்பிகை தம்பதியரின் தவப் புதல்வியும், மண்டைதீவு காலஞ்சென்றவர்களான நாகநாதி - சின்னம்மா தம்பதியரின் அருமை மருமகளும், முனிஜயா (மீசை மாமா) அவர்களின் ஆருயிர் மனைவியும், காலஞ்சென்றவர்களான சத்தியமூர்த்தி, தவராசா (தவம்) மற்றும் வசந்தமலர் (கனடா), காலஞ்சென்ற புஸ்பமலர் (லண்டன்) மற்றும் கருணாநிதி (லண்டன்), யோகேஸ்வரி (லண்டன்), தயாபரன் (கனடா), சூரியகலா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், முரளிதரன் (லண்டன்), முகுந்தன் (கனடா), விஜிதா (கனடா), முரேஸ் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுபாஜினி (லண்டன்), லேகா (கனடா), சுதாகரன் (கனடா), கோகிலா ஆகியோரின் அன்பான மாமியாரும், நர்மியா (லண்டன்), விக்ரம் (லண்டன்), கோபிகா (கனடா), நிலக்சனா (கனடா), கிரி (கனடா), பவநிசா (கனடா), ரோகான் (கனடா), ரியா (கனடா) ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், லலிதா, காலஞ்சென்ற செல்வராணி மற்றும் பன்னீர்ச்செல்வம் (கனடா), ரமேஸ் (லண்டன்), திரேசா (லண்டன்), சிவகலா (கனடா), விஜயகுமார் (கனடா) ஆகியோரின் மைத்துனியும், சந்திரிகா (கனடா), யுவராஜ் (கனடா) ஆகியோரின் பெரியம்மாவும், பிரபாத், கங்கா, வினோத் (கனடா), தேனுயா, தனுஜா, தாரணி, திவானி, திசான், நிரோசா அன்ரு (லண்டன்), கீரன் (லண்டன்), அஞ்சலா (லண்டன்), ரொசான் (கனடா), சங்கவி (கனடா) ஆகியோரின் அன்பான மாமியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
பிள்ளைகள்
மருமக்கள்

நாகநாதி முனிஜயா (கனடா)
094 771 071 172

(CS/3923) J-1

## 1ஆம் ஆண்டு நினைவு தின அழைப்பு



பிறப்பு
01 . 07 . 1950

இறப்பு
10 . 09 . 2024

கடந்த 10.09.2024 அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் செல்லன் செல்வராசா (அச்சாம்பி)

(நிதர்சனன் - மின்னொட்டு தொழிலக உரிமையாளர், யாழ்ப்பாணம்)

அவர்களின் முதலாம் ஆண்டுத் திவசமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று 31.08.2025 ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

ஆண்டுகள் கடக்கிறது ஆனால் நாட்கள்
போல் தெரிகின்றது உம் நினைவு
ஆயிரம் உறவுகள் இருந்தாலும் உம் உறவுக்கு
நிகரில்லை யாருமே
உங்கள் நினைவுகள் அழியவில்லை
எங்கள் கண்ணீரும் நிற்கவில்லை
அப்பா... அப்பா...

மறைந்திட்டாயோ என்று நினைத்திட எங்கள்
விழிகள் நித்தம் கண்ணீரால் நனைகின்றது
கட்டிடங்கள் காலத்தால் சிதைந்து போகும்!
காசு பணம் வாழ்நாளில் கரைந்தே போகும்!
நல்லவையும் சிலநேரம் வாழ்ந்து தாழ்ந்து போகும்!
ஆனால் உன் ஞாபகங்கள் எந்நாளும் எம் நெஞ்சில் வாழும்
ஆயிரம் ஆண்டானாலும் அழியா உம் நினைவுகளும்
உம் அன்பும், பாசத்தொடரும் எம்மை விட்டுபிரியாது
அப்பா..... அப்பா.....

வற்றாத உங்கள் நினைவுடன் மனம் உருகி கலங்கி நிற்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்...

தியாகராஜா வீதி,
சண்டிலிப்பாய்

குடும்பத்தினர்

(CS 59298) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர்க்கசிவைத் தடுப்பதற்கு



கட்டிடத்திற்கு தேவையான சகல இரசாயனப் பொருட்கள் (நீர்க்கசிவை தடுப்பது உட்பட) வேறு இடங்களை விட விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்.
கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு விலைக்கழிவு உண்டு.
தரம் குறைந்த போலிகளைக் கண்டு ஏமாறாதிர்கள்



Flatinum Flex சிலப்புகளுக்கு
Synroof வெளிப்புறச் சுவர்களுக்கு

North and East Engineering

077 524 4177, 077 232 3000

## தோட்டவேலைக்கு ஆண் தேவை

யாழ்ப்பாணம் அச்சுவேலியில் அமைந்துள்ள தோட்டவேலைக்கு ஆண் இரண்டு வேலையாட்கள் தேவை. தோட்ட வேலைகள் தெரிந்தவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். தங்கி நின்று வேலை செய்வதற்கு வெளி மாவட்டங்களில் வசிப்பவர்கள் மட்டும் உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.
மாத சம்பளம் 60000/-

தொடர்பு:- 076 739 0413

(CS/59268) J-1

## விசேட விமான பயண டிக்கட் கட்டணம்

| | |
|---|---|
| லண்டன் | - 104500/- |
| நிவ்சிலெண்ட் | - 150500/- |
| சுவிற்சலென்ட் | - 151700/- |
| பாரிஸ் | - 98000/- |
| மலேசியா | - 43500/- |
| துபாய் | - 27000/- |
| அவுஸ்ரேலியா | - 104100/- |
| கனடா | - 160500/- |
| ஸ்பெயின் | - 130000/- |
| சுவிடன் | - 135000/- |
| ஜேர்மனி | - 145000/- |
| இதாலி | - 57000/- |
| ஜபான் | - 82200/- |
| சைனா | - 78000/- |
| அமெரிக்கா | - 105000/- |

Condition Apply

### விசா

| | | | |
|---|---|---|---|
| மலேசியா | - 12500 | சைனா | - 25000 |
| கம்போடியா | - 18500 | எதியோப்பியா | - 24500 |
| இந்தியா | - 11000 | இந்தோனேசியா | - 35500 |
| எகிப்து | - 18500 | உஸ்பெகிஸ்தான் | - 19500 |
| வியட்நாம் | - 18500 | கென்யா | - 20500 |
| அஸர்பைஜான் | - 18500 | | |

மாணவர்களுக்கு 20% டிக்கட் கட்டணகழிவு
குழுக்களுக்கு 20% டிக்கட் கட்டணகழிவு

ஐரோப்பிய பயண விசாவுக்கான ஆவணங்கள் செய்துதரப்படும்

I FOUR TRAVELS & TOURS
#378, George De Silva Mawatha, Colombo -13.
0765858770 I 0777262672

KOKO VISA Accept

## மணமகள் தேவை

யாழ் இந்து (V) 1988ல் பிறந்த ஆண் திருமணமாகதவர் குற்றமற்ற ஜதகம் உள்ள மீருகசீரிசம்-மிதுனராசி யாழில் வசிக்கும் யாழ்நகரில் இலத்திரனியல் கடை உரிமையாளருக்கு மணமகள் தேவை. தரகர்களும் அனுகலாம்.

0789113766

## வாடகைக்கு



இரண்டு மாடி கடைத் தொகுதி வாடகைக்கு விடப்படும்.
1ஆம் மாடி 2500 சதுர அடி, 3 Phase மின்சாரம்
2ஆம் மாடி 2500 சதுர அடி, 3 Phase மின்சாரம்
இடம்: 83, தபால் நிலைய வீதி, சாகவச்சேரி.

தொடர்புகளுக்கு:
077 565 9990/ 047 98439960

(CS 59273)A




## ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்

இந்தியாவில் ஆன்மீகத்துறையில் 10 வருடங்களாக புகழ்பெற்ற

### அம்மன் அருள் வாக்கு

- கல்வியில் முன்னேற்றம் இல்லையா ?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா ?
- பிரிவால் வேதனையா? தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?
- மனதில் நிம்மதி இல்லையா?
- வாழ்வில் நிம்மதி இல்லையா?



அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
இல. 20/16, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(முன் அனுமதி பெற்றுக்கொள்ளவும்.)

தொடர்புகளுக்கு :- 077 281 1234


# விசேட அறிவித்தல்



இது சிலோன் கிரீன் லைஃப் பிளான்டேஷன் (பிரைவேட்) லிமிடெட் உடன் வணிக உறவுகளைக் கொண்ட அனைத்து நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் கவனத்திற்கு

எங்கள் நிறுவனத்தின் வலய முகாமையாளராகப் பணிபுரிந்து வந்த, **பவுனீர் வீதி, பெரியகல்லார் 01, கல்லாறில் வசிக்கும் செல்லத்தம்பி ஜெசிகரன் (தேசிய அடையாள இல. 781452360V),** என்பவர் **2025 ஜூலை மாதம் 07,** ஆம் திகதி முதல் எங்கள் நிறுவனத்தில் பணியில் இல்லை என்பதனை இதன் மூலம் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் இதற்கு பிறகு சிலோன் கிரீன் லைஃப் பிளான்டேஷன் (பிரைவேட்) லிமிடெட் சார்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு பரிவர்த்தனைக்கும் எங்கள் நிறுவனம் பொறுப்பேற்காது என்பதனை இதன் மூலம் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.


## மணமகள் தேவை

யாழ் இந்து (V) 1985 இல் பிறந்த, நட்சத்திரம் மகம், மணமகனுக்கு மணமகள் தேவை. மணமகன் கொழும்பில் Electricin ஆக தொழில் புரிகிறார்.

தொடர்பு:- 075 771 8340

(CS/59246) J-1

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 75 ரூபா
நிலம் இழுத்துப் பதிக்க - 100 ரூபா

077 334 1281

## வேலையாள் தேவை

வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு வேலையாள் தேவை.

## வீடு மற்றும் அறைகளும் வாடகைக்கு உண்டு

யாழ். நகரை அண்மித்த பகுதியில் சகல வசதிகளுடனும் கூடிய புதிய வீடு மற்றும் அறைகளும் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
076 320 0039

(CS 59090) A


## வாகன விபத்துகளில்

# 24 மணிநேரத்தில் அறுவர் உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 31

நாட்டின் பல பகுதிகளில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாகன விபத்துகளில் 6 பேர் உயிரிழந்துள்ளனர். கிளிநொச்சி, மொரவெவ, அநுராதபுரம், வலஸ்முல்ல மற்றும் அரலகங்வில ஆகிய இடங்களில் இந்த வாகன விபத்துகள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)


## காணி தேவை

சாவகச்சேரி A9 வீதிக்கு அருகாமையில் வெற்றுக்காணி அல்லது கட்டடத்துடன் கூடிய காணி விற்க விரும்புபவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும். தரகர் தொடர்பு கொள்ள வேண்டாம்.

தொடர்பு: 077 410 9151

(CS/3920) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதாள உலகத் தலைவர்கள் சி.ஐ.டியிடம்

இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் கைது செய்யப்பட்டு நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட பாதாள உலகக் குழு தலைவர்களான கெஹெல்பத்தர பத்மே, கமாண்டோ சலிந்த மற்றும் பாணந்துறை நிலங்க ஆகியோர் மேலதிக விசாரணைகளுக்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். அதேநேரம் பெக்கோ சமன் மற்றும் தெம்பிலி ல ஹிரு ஆகியோர் மேலதிக விசாரணைகளுக்காக மேல் மாகாண வடக்கு குற்ற விசாரணை பிரிவிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஏ-இ)

**விற்பனைக்கு**

தனி பாவனையிலிருந்த யப்பான் கீறோ சுப்பர்கப் 50 மோட்டார் சைக்கிள் நல்ல நிலையில் விற்பனைக்கு.

தொடர்பு: 077 656 6508

**சிறந்த நிலம் விற்பனைக்கு!**

- மீசாலை கிழக்கு - வீட்டு நிலம்
- அல்லாரை தெற்கு - வீட்டுடன் தென்னங்காணி

விலை பேசித்தீர்மானிக்கலாம்

தொடர்புகளுக்கு:-

077 6544 540

(CR/45765) J-1

**வீடு வாடகைக்கு தேவை**

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கு அருகில் சிறு வீடு வாடகைக்கு தேவை.

தொடர்பு: 077 633 9803

(CS/59285) J-1

## ஐ.நா....

நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள் ளன என்று தகவல்கள் வெளியாகியுள் ளன. எதிர்வரும் 8ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது அமர்வு ஆரம்பமாகவுள்ளது. அதில் ஆணையாளர் இலங்கை தொடர்பான தனது புதிய அறிக்கையை வெளியிடவுள்ளார்.

ஆணையாளர் வோல்கர் சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையில் இலங்கையில் காணப் படும் மனித உரிமை நிலை, சட்ட நடைமுறைகள் மற்றும் அரசின் ஒத்துழைப்புகள் குறித்த மதிப்பீடு இடம்பெறவுள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

இது இலங்கை இராணுவத்தின் மீது போர்க்குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அவர்களை சர்வதேசத்திடம் காட்டிக் கொடுக்கும் செயற்பாடாகும் என்று கூறும் சரத் வீரசேகர, இந்த அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பொதுமக்களின் கையெழுத்துகளைச் சேகரித்து, கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவலகத்தில் கையளிக்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளார் என்று தெரிவிக்கப் படுகின்றது.

அதேவேளை பிரித்தானியா மற்றும் கனடா இணைந்து, இலங்கை தொடர்பான புதிய தீர்மானம் ஒன்றை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அமர்வில் முன்வைக்கவுள்ளன. (அ-எ-இ)

## 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 01.08.2025 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் சண்முகலிங்கம் சிவநேசன்

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்றைய தினம் 31.08.2025 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். மேலும் அன்னாரின் பிரிவுச்செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் அனுதாபங்களை பகிர்ந்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**அம்மன் வீதி,**
**1ம் குறுக்குத் தெரு,**
**மீசாலை கிழக்கு,**
**மீசாலை**

குடும்பத்தினர்
077 506 0131

## மரண அறிவித்தல்



தோற்றம் 19 . 02 . 1942

மறைவு 29 . 08 . 2025

### முருகையா நேத்திராம்பாள்

இணுவில் கிழக்கை பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணை கேசாவில் வீதி (பேச்சியம்மன் கோவிலடி) வசிப்பிடமாகவும் கொண்ட முருகையா நேத்திராம்பாள் அவர்கள் கடந்த (29.08.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - கௌரிஅம்மை தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற முருகையாவின் அன்பு மனைவியும், ஈஸ்வரி, புவனேஸ்வரன், புஸ்பாஞ்சலி, ரிஷாஞ்சனி ஆகியோரின் அன்புத் தாயாரும், சேகரன், தெய்வகலை, சிவமயம், பிரபாகர் அவர்களின் அன்பு மாமியாரும், செனோராம், செச்சின், சிவரிசி, சிந்தூரி, கஜலக்சி, சுபலக்சன், வைஸ்ணவன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், பாஸ்கரன், சிவகரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் கிருஸ்ணராணி, இந்திராணி காலஞ்சென்ற செல்வராணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (01.09.2025) திங்கட்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**வண்ணார் பண்ணை**
**கேசாவில் வீதி,**
**பேச்சியம்மன் கோவிலடி.**

(CS/59284) J-1

தகவல்:
குடும்பத்தினர்
077 857 3885



## எட்டாம் ஆண்டு நினைவலைகள்

### அமரர் இ.அருள்நேசன்

**(முன்னாள் எழுதுவினைஞர் மக்கள் வங்கி - மன்னார், போதகர், கிறிஸ்தவ குடும்பசபை - யாழ்ப்பாணம்)**

**31.08.2025**

எட்டாண்டு ஆனாலும் எம் இதயம் ஆறவில்லை எந்நாளும் எங்களை கண்மணிபோல காத்து
களிப்புடன் கலங்காமல் வாழ வைத்த எங்கள் அப்பா ஏன் எம்மை விட்டுச் சென்றீர்கள்
எங்கிருந்தாலும் ஓடி வாருங்கள் எங்களை ஆற்றுப்படுத்த ஆறுதலற்றுத் தவிக்கும் எங்களுக்கும்
அம்மப்பா என்றழைக்கும் மழலைச் செல்வங்களின் மழலைச் சத்தம் கேட்கவும் ஓடி வாருங்கள் அப்பா.

உங்கள் நினைவுடன்
மனைவி, மகள்
பேரக்குழந்தைகள்.

**இல 200, சென் பெனடிக்ற் றோட்,**
**அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.**

(CS/59278) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேண்டும்...

கவனவீர்ப்புப் போராட்டமும், ஊர்வலமும் யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இந்தப் போராட்டங்களிலும், ஊர்வலங்களிலும் பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டனர்.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணத்தில் நேற்று முற்பகல் 11.10 மணியளவில் நல்லூர் கிட்டுப் பூங்கா முன்பாக ஆரம்பித்த ஊர்வலம் செம்மணிச் சந்தியைச் சென்றடைந்தது. செம்மணி மனிதப் புதைகுழியில் மீட்கப்பட்ட மனித என்புக்கூடுகளின் ஒளிப்படங்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வலிகளைத் தாங்கிய ஊர்தி சகிதம் ஆரம்பமான இந்த ஊர்வலம் பிற்பகல் 12.45 மணியளவில் செம்மணிச் சந்தியை அடைந்தது. அங்கு கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"செம்மணிப் புதைகுழி தமிழின அழிப்புக்குச் சான்று", "சிறீலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்து", "இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட எமது பிள்ளைகளுக்கு இறப்புச் சான்றிதழ்தான் பதில் என்றால், கொலை செய்தவன் யார்?", "சிறீலங்காவின் உள்நாட்டுப் பொறிமுறையை நிராகரிக்கின்றோம்", "காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை மிரட்டுவதையும், அச்சுறுத்துவதையும் நிறுத்துங்கள்", "ஆக்கிரமிப்பு முடிவடையவேண்டும், தமிழர் தாயகம் தன்னாட்சி பெறவேண்டும்" என்பன போன்ற பல சுலோகங்கள் அடங்கிய பாதாகைகளையும், கோசங்களையும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் எழுப்பினர்.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்திலும், ஊர்வலத்திலும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், சமயப் பெரியார்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், அரசியல்வாதிகள், அரசியல் கட்சிப் பிரதிநிதிகள், சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கலந்துகொண்டனர்.

**மட்டக்களப்பு**

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, கல்லடிப் பாலத்தில் இருந்து ஆரம்பமான ஊர்வலம் காந்தி பூங்காவரை சென்று அங்கு கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஐ.நா. சபைக்கு கையளிப்பதற்கான மனுவும் அங்கு வாசிக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் ஒளிப்படங்களை ஏந்தியவாறு, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வலிகளைத் தாங்கிய ஊர்தி சகிதம் இந்த ஊர்வலம் நடைபெற்றது.

வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்றும், செம்மணிப் புதைகுழி தமிழின அழிப்புக்குச் சான்று, ஸ்ரீலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்தவேண்டும் என்றும் போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

இந்த ஊர்வலத்திலும், கவனவீர்ப்புப் போராட்டத்திலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், அரசியல்வாதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைத் தவிசாளர்கள், உறுப்பினர்கள், பொதுமக்கள், சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(அ-எ-66-26-20)

September Intake
MBA
Fast-track Mode
✔ UGC, WES Approved
Call for more details
DTPE Campus-077 543 8086
(CS 39241) A

சாரதி தேவை
நீர்வேலி கோப்பாயில்
A, D வாகனம் ஓடக்கூடிய
சாரதி தேவை
தொடர்புகளுக்கு:
Colombo Paint Center
077 789 0398
077 789 0105

தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு
பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில்
20 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த
காணி விற்பனைக்கு உண்டு. பிரித்து
வழங்கப்பட மாட்டாது. ஏக்கர் 13 இலட்சம்.
தொடர்பு : Whatsapp : 0044 740 537 3526
(CS 59217) E

மணல் விற்பனைக்கு
கட்டிட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற மணல் விற்பனைக்கு உண்டு. கனரக வாகனங்களுக்கு யாழ் மாவட்ட வீதி அனுமதிப்பத்திரம் போட்டு தரப்படும்.
அல்லது
▪ தென்மராட்சி 50,000, ▪ யாழ்மாவட்டம் 55,000
▪ வடமராட்சி 58,000
விநியோகிக்கப்படும்.
தொடர்பு:- 076 324 9977

## நீதியை...

நாணயக்கார தெரிவித்துள்ளார். சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தால் கொழும்பில் உள்ள அலரிமாளிகையில் நேற்று நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த நிகழ்வில் உரையாற்றியபோதே நீதி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எமது அரசாங்கம் 1988ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் காணாமல் ஆக்கப்படலால் பாதிக்கப்பட்டது. இந்தப் பிரச்சினையின் ஓரங்கமான எமக்கு, இது நீடிக்காதவாறு தீர்வுகாணவேண்டிய கடப்பாடு இருக்கின்றது.

கணவனோ, மகனோ அல்லது சகோதரனோ வலிந்து காணாமலாக்கப்பட்ட பின்னர், அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறியாமல் வாழ்வதென்பது ஆயுளுக்கும் தொடரும் வேதனை என்பதை நான் அறிவேன். இதை வெறுமனே சம்பிரதாய பூர்வமான நினைவுகூரலாகவோ அல்லது வருடத்துக்கு ஒருமுறை மட்டும் பேசும் விடயமாகவோ வைத்திருக்க இடமளிக்கமாட்டோம். பாதிக்கப்பட்டவர்களை ஏமாற்றவும் மாட்டோம்.

நான் இப்போது எதைக்கூறினாலும் பாதிக்கப்பட்ட மக்கள் சந்தேகக் கண் கொண்டே நோக்குவர். ஏனெனில் நான் கூறுகின்ற விடயங்கள் செயல்வடிவம் பெறவேண்டியிருக்கின்றது. வலிந்து காணாமல் ஆக்கப்படுதல்கள் நாம் உருவாக்கிய பிரச்சினை அல்ல. ஆனால் இந்தப் பிரச்சினை எமது அடுத்த ஆட்சிக்காலத்திலும் தொடர்வதை நாம் ஒருபோதும் விரும்பவில்லை. இதற்கு இயலுமான வரை விரைவாகத் தீர்வு காணவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

வலிந்து காணாமலாக்கப்படல் என்பது ஒரு விபத்து அல்ல, அதுவோர் குற்றமாகும். அதன்மூலம் உயிர்வாழ்வதற்கான உரிமை, குடும்பத்துடன் வாழ்வதற்கான உரிமை மற்றும் கௌரவமாக வாழ்வதற்கான உரிமை என்பன பறிக்கப்படுகின்றன. தேசிய மக்கள் சக்தியின் கொள்கைப்பிரகடனத்தில் உண்மை, நீதி மற்றும் இழப்பீடு என்பவற்றை உறுதிசெய்வதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருக்கும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சட்டவரைவின் சில உள்ளடக்கங்கள் காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய அலுவலகச்சட்டம் மற்றும் இழப்பீட்டுக்கான அலுவலகச் சட்டம் ஆகிய சுயாதீனச் சட்டங்களில் தலையீடு செய்யும் வகையில் அமைந்துள்ளன. அவற்றைச் சீரமைப்பதற்குச் சட்ட வரைஞர் ஆணைக்குழுவுக்கு அறிவுறுத்தியுள்ளோம்.

அதேவேளை இந்த அனைத்துச் செயன்முறைகள் மற்றும் கட்டமைப்புகளும் பாதிக்கப்பட்ட தரப்பினரை மையப்படுத்தியவையாக அமையவேண்டும். அதன்படி தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அதேவேளை, பாதிக்கப்பட்ட தரப்பினரின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் நீதி நிலைநாட்டப்படும். அதன் ஓர் அங்கமாகவே அடுத்த மாதத் தொடக்கத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவுள்ளது. அதற்குப் பதிலாகக் கொண்டுவரப்படவுள்ள புதிய சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

மனிதப்புதைகுழி விவகாரத்தைப் பொறுத்தமட்டில், நாம் அதைச் சிறப்பாகக் கையாண்டுவருகிறோம். இருப்பினும் எமக்கு தொழில்நுட்ப மற்றும் நிபுணத்துவ உதவிகள் தேவைப்படுகின்றன. அவற்றைச் சர்வதேச சமூகத்திடம் கோரியிருக்கிறோம்.

தென்னாபிரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் விஞ்ஞானபூர்வ மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கு இணங்கியிருக்கின்றன. இங்கு அதிகளவு கண்ணீர் சிந்தப்பட்டிருக்கிறது. அதிகளவு இரத்தமும் சிந்தப்பட்டிருக்கிறது. வருங்காலங்களில் அவற்றைக் கடந்து தீர்வை நோக்கிப் பயணிக்க வேண்டும் - என்றார். (அ-எ-இ)

## தள்ளாத...

டங்களில் ஈடுபடுவோரில் பலர் தற்போது வயது மூப்படைந்துள்ளனர். தங்களின் பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டறிய வேண்டும், அவர்களை மீட்டெக்கவேண்டும் என்ற அவாவில் அவர்கள் தங்கள் மூப்பையும், நோய் நிலைமைகளையும் ஒதுக்கிவைத்துத் தொடர்ச்சியாகப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். மகனை, மகளை, உறவுகளைத் தேடிப் போராட்டத்தில் ஈடுபட்டுவந்த பலர் அவர்களின் ஆசை நிறைவேறாமலேயே உயிரிழந்துமுள்ளனர்.

நேற்று நடந்த ஊர்வலத்திலும், கவனவீர்ப்புப் போராட்டத்திலும் கடும் வெயிலுக்கு மத்தியில் தங்களின் தள்ளாத வயதில் இயலுமையை மீறி, தங்களின் உறவுகளை மீட்டெடுத்துவிட வேண்டும், அவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டறியவேண்டும் என்ற உறுதியுடன் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பலர் கலந்துகொண்டிருந்ததைக் காணமுடிந்தது. தங்களின் உறவுகளை நினைத்து அவர்கள் கதறி அழுது, அரற்றியமை அங்கிருந்தவர்களின் கண்களையும் பனிக்கச் செய்தது. (அ-எ)

## விசேட...

விக்கிரமசிங்க உரை நிகழ்த்துவார் என்று எதிர்பார்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டுகளில் பொதுச் சொத்துகள் சட்டத்தின் கீழ் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 22ஆம் திகதி கைதுசெய்யப்பட்டார். அன்று கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட அவர், கடந்த 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார். அவரது உடல் நிலை சீரின்மையால் அன்றே சிறைச்சாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், அதன்பின்னர் கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு, தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.

கடந்த 26ஆம் திகதி பிணைக் கோரிக்கையை முன்வைத்த முன்னாள் ஜனாதிபதியின் சட்டத்தரணிகள் அவரது நோய்கள் தொடர்பாக நீண்ட பட்டியலைச் சமர்ப்பித்து பிணைகோரியிருந்தனர். மருத்துவ அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு நீதிமன்றம் அவருக்குப் பிணை அனுமதி வழங்கியது.

கொழும்பு தேசிய மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப்பிரிவில் இருந்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நேற்றுமுன்தினம் மருத்துவமனையில் இருந்து வெளியேறினார். தற்போது அவர் நாட்டு மக்களுக்கு விசேட உரையொன்றை நிகழ்த்தவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-எ-சீ)

## செம்மணிப்...

பட்டுள்ளன. ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட 6 மனித என்புக்கூடுகள் நேற்று முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டன. சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியின் அகழ்வு நடவடிக்கைகளின் இரண்டாம் கட்டத்தின் மூன்றாம் பகுதி தற்போது நடைபெற்றுவருகின்றது. மூன்றாம் கட்டத்தில் ஆறாவது நாளாக நேற்றும் அகழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதுவரை நடைபெற்ற அகழ்வு நடவடிக்கைகளில் 197 மனித என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் 181 மனித என்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அகழ்வு நடவடிக்கைகள் நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில், துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவாவின் தலைமையில் முன்னெடுக்கப்படுகின்றன. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி ஞா.ரனித்தா, காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் சார்பாக பூரணி மரியநாயகம், சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினர், யாழ்ப்பாணப்பல்கலைக்கழக மருத்துவபீட மற்றும் கலைப்பீட தொல்லியற்துறை மாணவர்கள் ஆகியோரும் நேற்றைய அகழ்வு நடவடிக்கைகளின்போது முன்னிலையாகினர். (அ-எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கக்குழு இலங்கை வருகை

ஆட்சி, வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றில் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்காக அமெரிக்கக்குழு வொன்று இலங்கைக்கு வந்துள்ளது. இலங்கையின் அரச உயர்தலைவர்கள் மற்றும் மக்கள் பிரதி நிதிகளை அந்தக் குழுவினர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திவருகின்றனர். (ம)

**Spoken English & Grammar Classes**
Grade 7 to பட்டதாரிகள்
International School Students
K.Ganesh B.A (UOP)
யாழ் கந்தர்மடம்
**077 766 8725**

**வீடு வாடகைக்கு உண்டு**
யாழ் பிறவுண் வீதியில் இல 17/1, 10 அறைகள், 3 குளியலறை, 2 சமையலறை, 2 வரவேற்பறையுடன் கூடிய 2 மாடி வீடு வாடகைக்கு உண்டு. (நிறுவனங்கள் (Companies), குடும்பங்கள் விரும்பத்தக்கது)
தொடர்புகளுக்கு:
**077 807 2985 / 077 710 8101**

**வேலையாட்கள் தேவை**
வெதுப்பகத்திற்கு/ உணவகத்திற்கு பகுதி நேர / முழு நேர வேலைக்கு ஆட்கள் தேவை
முன் அனுபவம் உடையவர்களுக்கு (Juice Bar) முன்னுரிமை வழங்கப்படும்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்
தொடர்புகளுக்கு:
**077 999 9907**

**வேலையாட்கள் தேவை**
யாழ் நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள அழகுக் கலை நிலையத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை (Pedicure அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது) **077 774 3185**

**மணமகள் தேவை**
1992 இல் பிறந்த 2 இல் செவ்வாய் உள்ள அரசபணி (பொலிஸ்) புரியும் இந்து (V) மணமகனிற்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு:
**077 301 9182**

**தென்னங்காணி விற்பனைக்கு**
எழுது மட்டுவாளில் 3 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு.
குருநகரில் 5 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- **077 711 4361**
(CS/59267) J-1

**வீடு வாடகைக்குத் தேவை**
திருகோணமலை, மன்னார் பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: **077 401 5729**

**வேலைவாய்ப்பு**
கொழும்பு 02 இல் உள்ள Bun Cafe க்கு (பண் கபே) பணியாளர்கள் தேவை.
இலவச தங்குமிட வசதி + தினசரி உணவுக் கொடுப்பனவு
சம்பளம் : ரூ. 40,000 - ரூ.65,000 (அனுபவத்திற்கு ஏற்ப)
ஆண்கள் மட்டும், வயது : 25 - 35 (விரும்பத்தக்கது)
தொடர்பு:- **0706 78 78 78**


**வேலையாட்கள் தேவை**
மருதனார் மடத்தில் இயங்கிவரும் ஹொட்டல் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை
➤ மேற்பார்வையாளர் ➤ உணவு பரிமாறுபவர்கள்
➤ Room Keepers ➤ Kitchen Helpers
தொடர்பு: **074 348 4023**

**வைபோகம் திருமண சேவை**
**www.vaipokam.com**
விரைவில் திருமணம் நடைபெற !!
உங்களுக்கான துணையை நீங்களே தேர்ந்தெடுக்க !!
இப்போதே பதிவு செய்யுங்கள் !!
Whatsapp
தொடர்புகளுக்கு
**077 923 4501**
**077 565 2063**
(CS/30409) J-1

**பணியாளர்கள் தேவை**
எமது நிறுவனத்திற்கு கணனி இயக்குனர்கள் (Computer Operator, MS Office) மற்றும் நிதி மற்றும் பிற வேலைகளுக்கும் பணியாளர்கள் தேவைப்படுவதால் எதிர்வரும் 01, 02 Sep 2025 காலை 09 மணியில் இருந்து 5 மணிக்குள் சுயவிபரங்களுடன் நேரில் வரவும்.
S V M Agencies (PVT) LTD
அங்கர் விற்பனை முகவர் நிறுவனம்
No 154, Hospital Road, Jaffna
தொடர்புகளுக்கு:
021 222 2991
021 4925 825

**வேலைக்கு ஆட்கள் தேவை**
யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் வர்த்தக நிறுவனத்திற்கு
➤ றைவர் ➤ விற்பனை உதவியாளர்
போன்ற வேலையாட்கள் தேவை. ஆர்வம் உள்ளவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு உங்கள் சுயவிபரக்கோவையை அனுப்பி வைக்கவும்.
**RELIANCE DISTRIBUTORS**
37, பிரப்பங்குளம் லேன்
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
(CS/59260) J-1

# மரண அறிவித்தல்



## செல்லையா பாலரத்தினம் (நெல்லியான் பாலா)

(முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் நாரம்பிட்டிய),
(முன்னாள் பராமரிப்பு முகாமையாளர் Phoenicia Hotel Kuwait)

பொன்னாலையை பிறப்பிடமாகவும் நெல்லியான் மற்றும் தொல்புரத்தை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா பாலரத்தினம் கடந்த (28.08.2025) வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு பொற்கொடி தம்பதிகளின் அன்பு மருமகனும், விஜயலக்சுமியின் அன்பு கணவரும், விஜிதா (மருந்தாளர் Canada), கலாநிதி (Dr). சுமிர்த்தா (துணைப்பேராசிரியர் USA) பிருந்தாவன் (சிரேஸ்ர பொறியியலாளர் யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தவச்செல்வன் (Canada), தணிகைக்குமரன் (பௌதிக வியல் ஆசிரியர், USA) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஷகானா (Canada), ஷஞ்சனா (Canada) ஷதுர்சனா (USA), சத்விஹா (USA) ஆகியோரின் பாசமிகு பேரனாரும், காலஞ் சென்ற நாகரத்தினம், காலஞ்சென்ற செல்வரத்தினம், காலஞ்சென்ற இராசரத்தினம், (முன்னாள் இரசாயணத் தொழிற்சாலை மேற்பார்வையாளர் பரந்தன்), காலஞ்சென்ற விஜயரட்ணம் (ஓய்வு நிலை பொலிஸ் உத்தியோகத்தர்), சந்தனகுமரன் (Germany), காலஞ்சென்ற சிவ குமாரன் (ஓய்வு பெற்ற பிரதி அதிபர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகாலக்சுமி, காலஞ் சென்ற இராசகுமார் (ஓய்வு பெற்ற அதிபர்) காலஞ்சென்ற சந்திரகுமார், சூரியகுமார் (ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்) தனலக்சுமி, செல்வலக்சுமி, ஸ்ரீகுமார் (V.S Red Onion Seeds) மற்றும் நந்தகுமார் (உதவிப் பொலிஸ் பரிசோதகர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் இன்று (31.08.2025) ஞாயிற்றுக்கிழமை தொல்புரத்தில் உள்ள அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் இடம்பெற்று தகனத்துக்காக பொன்னாலை இந்து மயாணத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு:
பிருந்தாவன் (மகன்) +94776420783 (Sri Lanka).
விஜிதா (மகள்) +016476325469 (Canada).
சுமிர்த்தா (மகள்) +012409106613 (USA).

தகவல்:
குடும்பத்தினர்.
CS 2820 A

**அவசர தேவை**
சிறுநீரகம் பாதிப்படைந்த நபர் ஒருவருக்கு அவசரமாக O வகையான சிறுநீரகம் தேவைப்படுகின்றது.
வயதெல்லை 30 - 50
தொடர்பு: **076 476 7400**

**சமையலறை சுத்திகரிப்பாளர் தேவை**
யாழ் நகரில் இயங்கிவரும் பிரபல ஹோட்டல் ஒன்றிற்கு சமையலறை சுத்திகரிப்பாளர் தேவை.
தொடர்பு:- **070 745 8567**
(CS/59267) J-1

**விற்பனைக்காக**
**TOYOTA HIACE**
TOYOTA HIACE - LH103V 1994
இற்கான கேள்வி மனுக்கள் கோரப்படுகின்றது.
**வாகனத்தை பார்வையிடல் :** கிழமை நாட்களில் மட்டும் மு.ப 9.00 - பி.ப 4.00 03.09.2025 தொடக்கம் 11.09.2025 வரை
**விலாசம் :** உளவளத்துணை நிலையம் - சாந்திகம், இல 8, 8/1, கற்பக விநாயகர் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

**கேள்வி முடிவு திகதி :** 19.09.2025
**விதிமுறைகள் :** • கேள்வி மனுக்கள் சமர்ப்பிப்பதற்கு முன் வாகன பார்வையிடல் பரிந்துரைக்கப்படுகிறது.
• ஒரு நபருக்கு ஒரு கேள்வி மனு மாத்திரம் அனுமதிக்கப்படும்.
கேள்வி மனுக்களை **உளவளத்துணை நிலையம் - சாந்திகம், இல 8, 8/1, கற்பக விநாயகர் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்** என்ற முகவரியில் சமர்ப்பிக்கவும்.
உயர்ந்த விலை கோருபவரே தேர்ந்தெடுக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட மனுதாரர் மாத்திரமே தொடர்பு கொள்ளப்படுவார்.
**மேலதிக தொடர்புகளுக்கு :**
நிர்வாக அதிகாரி
**0212223338/ 0774062211**
(CR/45950) J-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

ஆவாம்நாம் ஆக்கம் நசைஇ அறம்மறந்து
போவாம்நாம் என்னாப் புன்நெஞ்சே — ஓவாது
நின்றுஞற்றி வாழ்தி எனினும்நின் வாழ்நாட்கள்
சென்றன செய்வது உரை.
— நாலடியார்

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2056 ஆவணி 15 ஞாயிற்றுக்கிழமை (31.08.2025) சிகரம் :154

# வடமாகாணத்தை இலக்கு வைக்கும் ஊழல் குற்றச்சாட்டுகள்!




அ.நிக்ஸன்

வடக்கு கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக வடமாகாணத்தில் அரச அதிகாரிகள், மருத்துவ அதிகாரிகள் சிலர் ஊழல் மோசடியில் ஈடுபடுவதாக கடந்த ஒரு வருடமாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள் ளன. 'மருத்துவர்களில்லல் சிலர் பொறுப்பற்ற முறையில் செயற்படுகின்றனர்' என்பதில் மாற்றுக் கருத்தில்லை. சில தனியார் மருத்துவமனைகளும் அவ்வாறு ஊழல் நோக்கத்தின் அடிப்படையில் தான் இயங்குகின்றன. அரச மருத்துவர்கள் சிலரும் அதற்கு உடந்தை என்பது உண்மை.

அரசியல் போராட்டம் நடத்திப் பாதிக்கப்பட்ட சமூகமாக சிந்தித்து , அர்ப்பணிப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் அரச அதிகாரிகள், அரச மருத்துவர்கள் போன்றோர் மன உளைச்சலுக்கு உள்ளாகாத முறையில் குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட வேண்டும். குறிப்பாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அந்தப் பொறுப்பு உண்டு.

அந்த வகையில், இலங்கை அரசு என்ற கட்டமைப்பின் கணக்காய்வு என்பது மத்திய அரசு - மாகாண அரசு என இரண்டு வகைப்படும். மாகாணம் ஒன்றின் கீழ் உள்ள மத்திய அரசுக்குரிய திணைக்களங்கள் மற்றும் தேசிய மருத்துவமனைகள் பற்றிய கணக்குகளை மத்திய அரசின் தேசிய கணக்காய்வுப் பிரிவு (National audit Office) ஆய்வு செய்யும். மாகாணங்களில் உள்ள அரச திணைக்களங்கள் மருத்துவமனைகள் பற்றிய கணக்கு ஆய்வுகளை மாகாணங்களின் கீழ் இயங்கும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு (Internal Audit Units) ஆய்வு செய்யும்.

அரசாங்கப் பொதுக் கணக்காய்வுத் திணைக்களம் (Auditor General General's Department) மாகாணங்களின் கீழ் இயங்கும் அரச திணைக்களங்கள், மருத்துவமனைகள் போன்றவற்றின் கணக்குகளை ஆய்வு செய்யும் அதிகாரம் பெற்றது.

அரச திணைக்களங்கள், அரச மருத்துவமனைகள் தங்களின் கணக்குகள் பற்றிய முழு விவரங்களையும் அடுத்து வரும் 12 ஆண்டுகள் வரை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். ஆனால், தனியார் வங்கி உள்ளிட்ட அனைத்து தனியார் நிறுவனங்களும் 6 வருடங்களுக்கு தங்கள் கணக்கு விவரங்களை பாதுகாத்து வைத்திருக்க வேண்டும். அதேநேரம் எந்த ஒரு கணக்கு ஆய்வுகளும் பகிரங்கமாக வெளியிடப்படுவதில்லை.

ஆனால்

1) சம்பந்தப்பட்ட அரச அலுவலகங்களில் அவற்றைப் பார்வையிடலாம்.

2) அல்லது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் (Right to Information Act) பிரகாரம் விபரங்களை எந்த ஒரு பொதுமகனும் தெரிந்து கொள்ள முடியும். இருந்தாலும் இச் சட்டத்தின் பிரகாரம் விண்ணப்பித்தால், உரிய பதில் கிடைக்கும் என்றில்லை. அல்லது அரசியல் காரணங்களால் தகவல்கள் வழங்க காலதாமதம் ஏற்படலாம்.

3) இருந்தாலும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தமது மாகாணத்தில் அல்லது மாவட்டத்தில் இயங்கும் அரச திணைக்களம் மருத்துவமனைகள் போன்றவற்றின் கணக்காய்வு அறிக்கைகளை நேரடியாகப் பெற முடியும்.

4) அல்லது நாடாளுமன்றத்தில் வாய்மொழி மூல கேள்வி நேரத்தின் (Oral Questions) போது சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் வினா தொடுக்கமுடியும்.

இந்தச் செயற்பாட்டு முறைகள் எதுவும் கடந்த ஒரு வருடமாக பின்பற்றப்படாத ஒரு பின்னணியில், வெறுமனே வடமாகாண அரச அதிகாரிகள், அரச மருத்துவமனைகள், மருத்துவ அதிகாரிகள் மீது தொடர்ந்து குற்றம் சுமத்துவதன் அரசியல் பின்னணி தொடர்பாகவே இங்கு கேள்விகள் எழுகின்றன. அத்துடன், வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஊழல் மோசடி, அதிகாரத் துஷ்பிரயோகம் இருப்பதாகக் கண்டறிந்தால், உடனடியாக இலங்கை நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவில் (The Financial Crimes Investigation Division FCID) முறையிடலாம். அதுவும் நாடாளு மன்ற உறுப்பினர்களுக்கு முறையிட முன்னுரிமை உண்டு. ஏனெனில் அவர்கள் மக்கள் பிரதிநிதிகள். உரிய தகவல்களையும் உரிய திணைக்கள அதிகாரிகளிடம் இருந்து கேட்டுப் பெறவும் முடியும். அத்துடன், அந்த முறைப்பாடு பற்றி நாடாளுமன்றத்தின் "கோப்" எனப்படும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் (Committee on Public Enterprises COPE of Parliament) அரசாங்க கணக்குகள் பற்றிய விபரங்கள் குறிப்பாக முறைப்பாடுகள் விசாரணைக்கு வரும். அல்லது கோப் குழு முன்னிலையில் அழைத்து விசாரணை நடத்தவும் முடியும். அவ்வாறு விசாரணைக்கு வரும்போது ஆதாரங்களை சமர்ப்பித்து குறித்த அரச உயர் அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும். இவ்வாறு சட்ட நடவடிக்கை எடுக்க அரசியல் தலையீடுகள் இருக்கும். ஆனாலும் நிச்சயமாக அந்த முறைப்பாடுகள் உரிய முறைப்படி கோப் குழுவுக்கு கிடைக்கும். ஆகவே, இதன் மூலம் குறைந்தபட்சம் ஊழல் மோசடி நடந்திருக்கிறது என்பதை பகிரங்கப்படுத்த முடியும் அல்லவா? ஆனால், இதுவரைக்கும் கோப் குழுவில் வடமாகாணத்தின் அரச திணைக்களங்கள் குறிப்பாக அரச மருத்துவமனைகள் ஆகியவற்றில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல்கள் விசாரணைக்கு எடுக்கப்பட்டதாக அறியவில்லையே. ஊழல் மோசடி அதிகாரத் துஷ்பிரயோகம் என்பது இலங்கைத்தீவின் அனைத்து மாகாணங்களிலும் மாவட்டங்களிலும் நடந்து கொண்டு தான் இருக்கிறது. உள்ளகக் கணக்காய்வுகள் மூலம் வடமாகாணத்தில் உள்ள அரச திணைக்களங்கள் சிலவற்றில் முறைகேடுகள் நடந்திருப்பதாகவும் அறிய முடிகிறது. ஆனால், கொழும்பு அரசியல் வலைப் பின்னல் இல்லாமல் அந்த முறைகேடுகள் நடத்திருக்க வாய்ப்பு இல்லாமில்லை.

ஆகவே, வெறுமனே குற்றம் சுமத்திக் கொண்டிருக்கும் உறுப்பினர்கள் சிலர், இந்த முறைகேடுகள் தொடர்பாக உரிய முறையில், தகவல்களை வெளியிட்டார்களா?

அந்த உள்ளக கணக்காய்வில் ஊழல் நடந்தது என்பதற்கான ஆதாரங்கள் இருந்திருந்தால், அதனை ஏன் இது வரை வெளிக்கொணரவில்லை?

ஏன் கொழும்பை நோக்கியோ, தனியார் மருத்துவமனைகளை நோக்கியோ குற்றம் சுமத்தவில்லை?

ஆகவே, குற்றச்சாட்டுகளை நிரூபிக்க முடியவில்லை என்றால், அல்லது கொழும்பை நோக்கி கேள்வி எழுப்ப முடியாது என்றால் அவ்வாறு சொல்வதை நிறுத்தவேண்டும். இப் பின்புலத்தில்தான் வடமாகாணத்தை மாத்திரம் அதுவும் யாழ்ப்பாண சமூகத்தை மாத்திரம் குறிவைத்து நகர்த்தப்படும் இந்த ஊழல் மோசடி குற்றச்சாட்டுகள் உள்நோக்கமும், சுயலாபமும் கொண்டவை என்ற முடிவுக்கு வர வேண்டியுள்ளது. எந்தத் தொழிலும் புனிதமானது தான். அவற்றில் தவறுகள் நடப்பதும் வழமைதான். ஆனால் மருத்துவம் உயிர் காக்கும் சேவை என்பதால், மருத்துவர்கள் பற்றிய தவறான பரப்புரைகள் மக்கள் மத்தியில் நம்பிக்கையீனங்களை ஏற்படுத்தி விடும் ஆபத்துகள் உண்டு. அத்துடன், ஈழத்தமிழர்கள் ஓர் ஊழல் சமூகம், தமிழ் அதிகாரிகளுக்கு அரச நிர்வாகம் தெரியாது. பணம் சம்பாதிப்பது மாத்திரமே நோக்கம் என்ற கோணங்களில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் பரப்புரைகள் இரண்டு வகையான ஆபத்துகளைக் கொண்டு வரும்.

1) எண்பது வருட அரசியல் போராட்டத்தை நிச்சயமாக கொச்சைப்படுத்தும். தமிழ் இளையோர் மத்தியில் கொழும்பு நிர்வாகம் மீது அதாவது இலங்கை ஒற்றையாட்சி அரசு மீதும், சிங்கள அரசியல் கட்சிகள் மீதும் நம்பிக்கை உருவாகும் ஆபத்து எழும்.

08

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

B

○ நிலாந்தன்

# பின்வாங்க முடியாத இடத்தில் அநுர!

ரணில் வெளியில் வந்துவிட்டார். மருத்துவமனையில் இருந்து வெளிவரும் போது கையில் அவர் வைத்திருந்த புத்தகம் தற்செயலானதா? அல்லது அவருடைய வழமையான பாணியா? அது முன்னாள் பிரித்தானியப் பிரதமர் போரிஸ் ஜோன்சன் எழுதிய 'Unleashed' (கட்டவிழ்த்து விடுதல்) என்ற புத்தகம். அதன் மூலம் ரணில் அரசாங்கத்துக்கு ஏதாவது சொல்ல நினைக்கிறாரா? அன்ரன் பாலசிங்கம் அவரை நரி என்று அழைத்தார். பாலசிங்கம் சொன்ன பல விடயங்களை தமிழர்கள் மறந்து விட்டார்கள். ஆனால் ரணிலைப்பற்றி அவர் சொன்னதை மறக்காமல் நினைவில் வைத்திருக்கிறார்கள்.


ரணிலைக் கைது செய்த விடயத்தில் தேசிய மக்கள் சக்தியானது பின்வாங்க முடியாத ஓர் இடத்துக்கு வந்திருக்கிறது என்று சட்டத்தரணி சாலிய பீரிஸ் கூறுகிறார். அவர் ஆங்கிலத்தில் 'Crossing the Rubicon' என்ற சொற்றொடரைப் பாவித்துள்ளார். அது ஜூலியஸ் சீசரின் துணிகரமான, ஆனால் பின்வாங்க முடியாத ஒரு யுத்த நகர்வைக் குறிக்கும் சொற்றொடர். பின்வாங்க முடியாத ஓர் இடத்துக்கு தேசிய மக்கள் சக்தி முன்நகர்ந்திருக்கிறது என்று பொருள்.

தொடர்ச்சியாக நிகழும் கைது நடவடிக்கைகளைத் தொகுத்துப் பார்த்தல் தேசிய மக்கள் சக்தி அதை நன்கு விளங்கி வைத்திருக்கிறது என்றே தெரிகிறது. தமிழ்த் தேசிய அரசியல் நோக்கு நிலையில் இருந்து தேசிய மக்கள் சக்தி மீது விமர்சனங்கள் ஆயிரம் உள்ளன. ஆனால் சிங்கள மக்களைப் பொறுத்தவரையிலும் அது சில மாற்றங்களைக் காட்டுகிறது என்பதைத் தமிழர்கள் ஏற்றுக்கொண்டுதானாக வேண்டும். குறிப்பாக ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளைப் பொறுத்தவரை இதுவரை 70க்கும் குறையாதவர்கள் கைது செய்யப்பட்டு விட்டார்கள். இவர்களில் அரசியல்வாதிகள், உயர் நிர்வாகிகள், பொலிஸ் அதிகாரிகள் படைப்பிரதானிகள், அரசியல் வாதிகளின் கைக் கூலிகளான பாதாள உலகக் குற்றவாளிகள் போன்றவர்கள் அடங்குவர்.

ரணில் விக்கிரமசிங்கவை கைதுசெய்த பின் அதிலிருந்து பின்வாங்கினால், இப்பொழுது சீண்டப்பட்டிருக்கும், தற்காப்பு நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் சிங்கள மேட்டுக்குடியும் எதிர்க்கட்சிகளும் பழிவாங்கும் உணர்ச்சியோடு அநுரமீது பாயும். அதாவது தாக்கும் நிலைக்கு வளரக்கூடும். எனவே தேசிய மக்கள் சக்தி திரும்பிப் போக முடியாது. அப்படிப் போனால் அது எல்லாவிதத்திலும் தோல்வி. அதனால் ரணிலைத் தொடர்ந்து அடுத்தடுத்து பெரிய தலைகளைக் கைது செய்வதன்மூலம் சிங்கள பௌத்த மேட்டுக்குடியை ஒருவித அச்சச் சூழலில், தற்காப்பு நிலையில் வைத்திருக்கலாம்.

ஏற்கனவே ரணில் விக்கிரமசிங்க கைதுசெய்யப்பட்டதோடு சிங்கள பௌத்த உயர் குழாம் ஒன்று திரண்டு விட்டது. ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் பின்வருமாறு கூறினார்… 'கட்சி பேதமின்றி நாம் ஒன்றிணைய வேண்டும். இவை அனைத்தும் இணைந்து இறுதியில் எமது வீட்டுக் கதவைத் தட்டும். நாம் தற்பொழுது ஒன்றிணைந்து எதிர்கொள்ளவில்லை என்றால் எதிர்காலத்தில் ஆபத்தான சூழ்நிலையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்' இது சிங்கள பௌத்த உயர் குழாத்தின் அச்சத்தைப் பிரதிபலிக்கும் கருத்தாகும். ரணிலைக் கைது செய்வதன்மூலம் சிங்கள பௌத்த உயர் குழாமும் எதிர்க்கட்சிகளும் உஷார் ஆகிவிட்டன. இந்த அரசாங்கம் இப்படியே தொடர்ந்து முன் சென்றால் தங்கள் எல்லாரிலும் கைவைக்கக்கூடும் என்ற அச்சம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இதனால் எதிர்க்கட்சிகள் மீண்டும் ஒன்று திரளும் வாய்ப்புகள் அதிகரிக்கும்.

இது ஒரு ஒத்திகைதான். இப்போதுள்ள சிங்கள பௌத்த உயர் குழாத்தில் ஒப்பீட்டளவில் மென் இலக்காக ரணில்தான் காணப்படுகிறார். அவருடைய தாய்க் கட்சி உடைந்துவிட்டது. அவர் ஒரு பலமான அணியாக இல்லை. உள்நாட்டில் அவர் அனேகமாக பலவீனமான ஒரு தலைவர்தான். அவர் மிடுக்காக நிமிர்ந்து காட்சி தருபவர் அல்ல. தன்னை ஜனவசியம் மிக்க ஒரு தலைவராகக் கட்டி எழுப்ப வேண்டும் என்பதற்காக சிங்கள பௌத்த இனவாதத்தின் தீவிர நிலைகளுக்கு தலைமை தாங்குபவர் அல்லர். அல்லது சிங்கள பௌத்த கூட்டு உளவியலைக் கவரும் விதத்தில் ஆடை அணிகலன்கள் போன்றவற்றில் கவனம் செலுத்துபவர் அல்லர். மாறாக அவர் தன் அரசியல் வாழ்க்கை முழுவதிலும் மேற்கத்திய உடைகளோடுதான் காணப்பட்டார். மேற்கத்திய அறிவுவாதத்தின் வாரிசாகவும் தன்னை காட்டிக் கொள்ள முற்பட்டார். ராஜபக்சக்களை போலன்றி ஏன் அநுரவைப் போலன்றி எல்லாப் பேரரசுகளையும் சமதூரத்தில் வைத்திருக்கக்கூடிய தந்திரசாலியாகவும் கெட்டிக்காரராகவும் அவர் காணப்பட்டார். ஆனால் அவருடைய கெட்டித்தனங்கள் சிங்கள மக்களைக் கவரவில்லை. சிங்கள மக்களைக் கவர்வதற்கு ராஜபக்சக்களிடம் நிறைய இருந்தது. ரணிலிடம் குறைவாகவே இருந்தது. அதனால்தான் அவர் அநேகமாக தேர்தல்களில் தோற்கடிக்கப்படும் ஒரு தலைவராகக் காணப்பட்டார். எனினும் உள்நாட்டில் அவர் பலவீனமாக தலைவராக இருந்த பொழுதும், அனைத்துலக அளவில் அவர் ஒரு பலமான ஒரு பிம்பத்தை கட்டியெழுப்பி வைத்திருந்தார். மேற்கத்திய தலைநகரங்களிலும் சரி ஐக்கிய நாடுகள் சபை, நாணய நிதியம் போன்ற உலகப் பொது நிறுவனங்களிலும் சரி அவருக்கு கவர்ச்சி அதிகம்.



இவ்வாறு உள்நாட்டில் கவர்ச்சி குறைந்த ஒருவரை ஒரு மென் இலக்கை முதலில் கைது செய்ததன்மூலம் அநுர ஒத்திகை ஒன்றைச் செய்தார் என்றும் எடுத்துக் கொள்ளலாம். இது எதிர்காலத்தில் நிகழப் போகும் கைது நடவடிக்கைகளுக்கான ஒத்திகை. அதேசமயம், ஏற்கனவே இளைய ராஜபக்சவாகிய சசீந்திர ராஜபக்ச கைது செய்யப்பட்டிருக்கிறார். அவருடைய விளக்கமறியல் நீடிக்கப்பட்டிருக்கிறது. மூத்த ராஜபக்சக்களில் கையை வைத்தால் எதிர்ப்பு பலமாக இருக்கலாம் என்று தேசிய மக்கள் சக்தி சிந்திக்கின்றது. மூத்த ராஜபக்சக்களில் கைவைத்தால் அது இனவாதத்தை மேலும் முன்னிலைக்குக் கொண்டு வரும். யுத்த வெற்றி வாதம் மீண்டும் பலமடையக்கூடும். அதனால் தான் பரீட்சார்த்தமாக சஷீந்திரவில், ரணிலில் கை வைத்திருக்கிறார்கள்.

அது இன்னொரு வகையில் பழைய பகையை கணக்கைத் தீர்ப்பது. அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வந்த அமைச்சர் பிமல் கூறினார் 'ரணிலை 40 ஆண்டுகளுக்கு முன்னரே கைது செய்திருக்க வேண்டும்' என்று. அது 40ஆண்டுகளுக்கு முந்திய ஜே.வி.பி.யின் கணக்கு. ஜே.வி.பி.யின் இரண்டாவது போராட்டத்தை கொடூரமாக நசுக்கியது ஐக்கிய தேசியக் கட்சியே. அப்பொழுது ரணில் அரசாங்கத்தில் ஒரு பிரதானி. எனவே அந்தக் கணக்கைத் தீர்க்க வேண்டிய தேவை ஜே.வி.பி.க்கு இருந்தது.

ஆனால் இந்த இடத்தில் மேலும் ஒன்றைச் சுட்டிக்காட்ட வேண்டும். ஜே.வி.பி.க்கு எதிராக இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல் குற்றங்களுக்காக அவர் கைது செய்யப்படவில்லை. அது ஒரு குற்றச்சாட்டாகவே இல்லை. பிமல் யாழ்ப்பாணத்தில் வைத்துச் சுட்டிக்காட்டிய, தமிழ் மக்களுக்கு எதிரான நூலக எரிப்பு போன்ற குற்றங்களுக்காகவும் அவர் கைது செய்யப்படவில்லை. அரச வளங்களை தனிப்பட்ட தேவைகளுக்குப் பயன்படுத்தியதற்காகத்தான் அவர் மீது வழக்கு. போர்க்குற்ற வழக்கு அல்ல.

எது எவ்வாறிருப்பினும் எதிர்க்கட்சிகள் ஒன்றுதிரண்டுள்ளன. 'தேசிய மக்கள் சக்தியை வீட்டுக்கு அனுப்புவதற்கான பலமான கூட்டணியை உருவாக்குவதற்கு அரசாங்கமே அடிக்கல் நாட்டியிருக்கிறது' என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார கூறியுள்ளார்.

சாலிய பீரிஸ் கூறியதுபோல திரும்பிவர முடியாத ஒரு இடத்துக்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வந்திருக்கின்றது. எனவே அவர்கள் தொடர்ந்தும் துணிச்சலாக ஊழலுக்கு எதிராக முன்போனால் மட்டும்தான் தமையும் காத்துக் கொள்ளலாம் எதிர்த்தரப்பையும் பலவீனப்படுத்தலாம்.

## தமிழர்களுக்கு என்ன பயன்?

அதேசமயம் இந்தக் கைது நடவடிக்கையால் தமிழ்த் தரப்புக்கு ஏற்பட்டிருக்கும் சாதக பாதக விளைவுகள் எவை? என்றும் ஆராயப்பட வேண்டும். ரணில் கைதுசெய்யப்பட்ட காலம் எது வென்று பார்க்க வேண்டும். அடுத்த ஜெனீவா கூட்டத்தொடருக்கு சில கிழமைகளுக்கு முன் அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். ஒரு முன்னாள் ஜனாதிபதியைக் கைது செய்யும் அளவுக்கு இலங்கைத்தீவின் உள்நாட்டு நீதி பலமாக உள்ளது என்று அனைத்துலக அரங்கில் எடுத்துக் கூறுவதற்கு அது அநுரவுக்கு உதவும். ரணில் மேற்கு நாடுகளுக்கும் ஐ.நா.வுக்கும் அதிகம் இசைவானவர். இலங்கைத் தீவில் மேற்கு நாடுகளின் அனுசரணையோடு முன்னெடுக்கப்பட்ட இரண்டு சமாதான முயற்சிகளில் அவர்தான் அரச பங்காளி. முதலாவது சமாதான முயற்சி நோர்வையின் அனுசரணையோடு கூடிய சமாதான முயற்சிகள்.

இரண்டாவது சமாதான முயற்சி, 2015ஆம் ஆண்டு ஐநா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பொறுப்புக் கூறலுக்கான தீர்மானம். இந்த இரண்டிலும் ரணில்தான் சிங்கள மக்களை பிரதிநிதித்துவப்படுத்தினார். அவருடைய காலத்தில்தான் மேற்கின் நிகழ்ச்சி நிரலுக்கு இசைவாக சமாதான முயற்சிகள் அல்லது நல்லிணக்க முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே மேற்கு நாடுகளுக்கும் ஐ.நா.வுக்கும் நாணய நிதியத்துக்கும் வாலாயமான ஒரு தலைவரை சில நாள்கள் தடுத்து வைத்ததன் மூலம் அநுர அரசு உள்நாட்டு நீதி தொடர்பில் ஒரு புதிய தோற்றப்பாட்டைக் கட்டியெழுப்ப முற்படுகின்றது.

ஏற்கனவே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தனது இலங்கை விஜயத்தின் போது உள்நாட்டு நிதியை வெளிநாட்டு உதவிகளோடு பலப்படுத்துவது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்திருந்தார். அதன்பின் அவர் வெளியிட்ட திருத்தப்படாத அறிக்கையிலும் அதே கருத்தைப் பிரதிபலித்திருந்தார். ஐ.நா. புதிய அரசாங்கத்துக்கு வாய்ப்புகளை வழங்கலாம் என்று தெரிகிறது. இப்படிப்பட்ட ஒரு பின்னணியில், உள்நாட்டு நீதியின் நம்பகத்தன்மையை பலப்படுத்துவதற்கு ரணில் கைது அரசாங்கத்துக்கு உதவும். இது தமிழ்த் தரப்பின் நிலைமையை ஐ.நா.வில் மேலும் பலவீனப்படுத்தும்.

இந்த விடயத்தில் அண்மையில், இன அழிப்புக்கு சர்வதேச விசாரணையைக் கேட்டு தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்று திரண்டிருப்பது சமயோசிதமானது பொருத்தமானது. எனவே கூட்டிக் கழித்துப் பார்த்தால் ரணிலைக் கைது செய்தமை என்பது சிங்கள மக்கள் மத்தியில் அரசாங்கத்தின் நம்பகத்தன்மையை பலப்படுத்துகிறது. அதேசமயம் எதிர்க் கட்சிகளை ஒன்று திரட்டியுள்ளது. உலக அளவிலும் உள்நாட்டு நீதியின் நம்பகத்தன்மையை பலப்படுத்துவதற்கு அது உதவக் கூடும். இந்த விடயத்தில் அரசாங்கத்துக்கு எதிராக ஒன்றுதிரளும் சிங்கள பௌத்த உயர் குழாமும் எதிர்க் கட்சிகளும் எப்படிப்பட்ட சவால்களை அரசாங்கத்துக்கு ஏற்படுத்தப் போகின்றன என்பதுதான் நாட்டின் எதிர்காலத்தையும் தேசிய மக்கள் சக்தியின் எதிர்காலத்தையும் ஐநாவில் தமிழர் விவகாரம் நீர்த்துப் போவதற்கான வாய்ப்புகளையும் தீர்மானிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்ப்புதினம்

இராகவன்

பாகம் 3

43

உள ருக்குள் நடக்கும் அந்தியேட்டி வீடுகளில் பாட்டுக்காரன் புலம்பல் பாடத்தொடங்கினால் எந்தக் கல் நெஞ்சமும் உருகி உருகிக் கண் ணீராக வழியுமெண்டு எங்கடை அம்மா சொல்லுவா. நானும் சில அந்தியேட்டி வீடுகளில் அவர் புலம்பல் பாடுவதை மிக நெருக்கமாக நின்று காதாரக் கேட்டிருக் கிறேன். ஆனால் கண்ணீர் வந்ததில்லை. எனக்கு அதை அப்போது விளங்கிக்கொள்ளும் பக்குவம் இல் லாததே காரணம். ராதா மாமாவின்ர அந்தியேட்டியில யும் புலம்பல் பாடினது பாட்டுக்காரன்தான். அவர் பாடி முடிச்சுப்போட்டு "ஆக்கம் முருகுகந்தன்" எண்டும் வாசிச்சார்.

"அதாரடி புதிசா முருகுகந்தன்? "எண்டு அம்மா கேட்டா. "வேறை ஆர் உன்ர கொம்மான்தான்" எண்டு அம்மா வுக்குப் பக்கத்திலயிருந்த சின்னப் பிள்ளைக் குஞ்சி சொன்னா. (சின்னப்பிள்ளைக் குஞ்சி பெரிய தோட்டத் திலயிருக்கிறவா. கொஞ்சங் 'கட்டன்றைற்றான' அரசிய லும் கதைப்பா. அதால ஊருக்குள்ள அவவைச் சிறிமா எண்டு செல்லமா அழைப்பினம். அவவின்ர மூத்தமேன் சிதம்பரநாதன் ஒரு காலத்தில தமிழர் விடுதலைக் கூட்ட ணியின்ர வடமராட்சி இணைப்பாளராக இருந்தவர்).

அவா சொன்னது அம்மாவுக்கு வடிவா விளங்கிட்டுது. அம்மாவின்ர தாயின்ர (அம்மம்மா) ஒண்டவிட்ட தம்பி கந்தப்புதான் ராதா மாமாவுக்கு புலம்பல் எழுதின வர். அவரின்ர முழுப்பெயர் முருகேசு கந்தப்பு. அதைச் சுருக்கித்தான் "முருகு கந்தன்" எண்டு எழுதினவர். ஊருக்கை கல்வெட்டுப் புலம்பல் எழுதப் பலரிருந்தாலும் இவர்தான் அதிலை ஸ்பெசலிஸ்ற். இவரை சும்மா கந்தப்பு எண்டு சொன்னால் ஒருத்தருக்கும் தெரியாது. உடனை 'எந்தக் கந்தப்பு?' எண்ட கேள்வி வரும். ஏனெண் டால் அப்ப ஊருக்கை கன கந்தப்பு இருந்தவை. பாட்டா கந்தப்பு (எப்பவும் பாட்டாச் செருப்போட டிக் டிக்கெண்டு சத்தம் போட்டுத் திரிவார்), நிழல் வாயில் கந்தப்பு ( இவ ரின்ர வீட்டுக்கு முன்னால பெரிய நிழல்வாடி மரம் நின் றது), மாவடிக் கந்தப்பு (இவரின்ரை வளவு முழுக்க மாமரங்கள் நின்றது), தலையாட்டிக் கந்தப்பு (எப்பவும் தலையாட்டிக்கொண்டிருப்பார்), சேல்ஸ்மன் கந்தப்பு (சங்கக்கடையில சேல்ஸ்மனா இருந்தவர்), பெட்டைக் கந்தப்பு (சாறத்தை நெஞ்சுக்குமேல எப்பவும் உயர்த்திக் கட்டிக்கொண்டு கீச்சிட்ட குரல்ல கதைப்பார்) இப்பிடிக் கனகந்தப்புமார் இருந்ததாலதான் சும்மா கந்தப்பு எண் டால் 'எந்தக் கந்தப்பு?' எண்ட கேள்வி வரும். அதால முருகேசு கந்தப்பு எண்ட முழுப்பெயருடைய முருகுகந் தனை எங்கட ஊரில "மன்னவன் கந்தப்பு" எண்டு அழைப்பினம்.

இந்த மன்னவன் கந்தப்பு வலு முசுப்பாத்தியான ஆள். நான் மாணிக்கவாசகர் வித்தியாலத்தில படிக்கேக்குள்ள இவர் பிரின்சிப்பலாயிருந்தவர். நல்ல கன்னங்கறுவல். எப்பவும் நெஷனலும் வேட்டியுந்தான் உடுப்பார். பிரம் புங்கையுமாத்தான் திரிவார். இடைக்கிடை பொடியளுக்கு முதுகு புளிக்க அடியும் விழும். சிலேடையாகக் கதைக் கிறதில வலுவிண்ணன். அதில இவரை அடிக்க இன் னொராள் பிறந்து வரவேணும். இவரின்ரை வீட்டுக்குச் "சிறுகுடில்" எண்டு பெயர் வைச்சார். அதால இவரைச் "சிறுகுடில் மன்னவன்" எண்டும் சொல்லுவினம்.

(தொடரும்)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
31 ஓகஸ்ட் 20

# எங்கே சஜீவன்?

மல்லாவி.
29.07.2024

நேரம் இரவு 11.30.

'சஜீவனை இன்னும் காணேலையப்பா, போன் எடுத்தாலும் எடுக்கிறானில்லை. கடைப்பக்கம் எங்கையும் பெடியளோட நிக்கிறானோ எண்டு பாத்துக்கொண்டு வாறிங்களோ?' ஒரு தாயின் பதைபதைப்போடு அந்தச் சொற்கள் வெளிவந்தன.

'நாளைக்குப் பயணத்தை வைச்சுக்கொண்டு இவன் எங்க மினக்கெடுறான், சலூனுக்குப் போயிருப்பானோ?' மனதுக்குள் மகனின் அக்கறையின்மையைக் கண்டித்தவாறே வெளியே அவசரமாகப் புறப்பட்ட ஆனந்தராசா, சிறிது நேரத்தில் தலையைத் தொங்கப்போட்டபடி வீட்டுக்குள் வந்தார்.

'சாமம் ஆகிட்டு, எல்லாக்கடையும் பூட்டு. வேற எங்க போயிருப்பான்?' தந்தையின் குரலிலும் கொஞ்சம் பயம் தொற்றிக்கொண்டது.

'வெளிநாட்டுக்குப் போனால் டொலர் தேவை எண்டதால, 20 லட்சத்தை டொலரா மாத்த பாண்டியன்குளம் போகோணும் எண்டு சொன்னவன். அதுக்குப் போட்டானோ தெரியேலை" என்று தாய் சொன்னதைக் கேட்டு, ஆனந்தராசாவின் பரபரப்பு இன்னும் அதிகரித்தது.

' இவ்வளவு காசோட இந்தச் சாமத்தில மினக்கெடோணுமோ? அவனோட கூடத்திரியிற பெடியளுக்கு தெரிஞ்சிருக்கும். அவங்களுக்கு போன் அடிச்சு விசாரிச்சுப் பாப்பம்'

ஆனந்தராசா சொன்னதும், அன்றிரவு ஒரு சில மணித்தியாலங்களுக்கு முன்னர் (8 மணியளவில்) தங்கள் வீட்டுக்கு வந்து, கே.டி.எச். (KDH ) ரக வாகனத்தை எடுத்துச் சென்ற சஜீவனின் நண்பன் லதீப்பின் (பெயர்மாற்றப்பட்டுள்ளது) நினைவு தாய்க்கு வந்தது.

'லதீப்புக்கு ஒருக்கா கோல் பண்ணி கேளுங்கோ, அவன் தானே கடைசியா வீட்ட வந்திட்டுப் போனவன், அவனுக்கு கட்டாயம் தெரிஞ்சிருக்கும்'

ஆனந்தராசா லதீப்புக்கு நாலைந்து தரம் போன் எடுத்தபோதும், அவன் பதிலளிக்கவில்லை. சஜீவனின் இன்னொரு நண்பனுக்கு போன் பண்ணினார்.

"சஜீவனோட எட்டே முக்கால் போல கதைச்சனான். திடீரெண்டு பொலிஸ்காரர் கண்ணுக்க லைட் அடிக்கிறாங்கள் பிறகு எடுக்கிறன் எண்டிட்டு வைச்சிட்டான். அதுக்குப் பிறகு கோல் பண்ணேலை' என்றொரு தகவலை அவன் சொன்னான்.

இப்படியே மினக்கெட்டால் காரியமாகாது என்றெண்ணிய ஆனந்தராசா, தனது நண்பரொருவரையும் அழைத்துக்கொண்டு .பாண்டியன்குளம் பக்கமாக விரைந்தார்.

நள்ளிரவு என்பதால் பாண்டியன்குளத்தில் பெரும் நிசப்தம். எல்லா வீடுகளும் உறக்கத்தில். அதனால் யாரையும் விசாரிக்கமுடியாமல் மீண்டும் வீட்டுக்கே வந்துசேர்ந்தார் ஆனந்தராசா.

அதற்கிடையில் சஜீவனைக் காணவில்லை என்ற தகவல் மல்லாவி முழுதும் காட்டுத்தீ போல பரவிவிட்டதால், அவர்களின் வீட்டில் பெருந்திரளானோர் கூடிவிட்டனர். நேரம் நள்ளிரவைக் கடக்க, வீட்டில் உள்ளோருக்கு பயம் அதிகரிக்கத் தொடங்கியது. மகனுக்கு என்ன நேர்ந்ததோ என்ற ஏக்கத்தில் தாய் அழுது புலம்பத் தொடங்கிவிட்டார். மீண்டும் ஒரு தேடுதல். அதிகாலை 1 மணி போல, பாலிநகர் ஊடாக பாண்டியன்குளம் வரை குடும்பத்தார் சென்று பார்த்தபோதும், சஜீவனைப் பற்றிய எவ்வித தகவலும் இல்லை. ஆனாலும் அவர்கள் தேடலைக் கைவிடவில்லை.

# நடுநிசிக் கொலை;



## பக்....பக்..பக்... பைக்....!

ஜூலை 30, அதிகாலை 3 மணி. மகனைத் தேடி அலைந்துகொண்டிருந்த ஆனந்தராசா, சிவபுரம் குத்துப்பாலத்தை அண்மித்தபோது போன் அலறியது. மறுமுனையில் சஜீவனின் நண்பன் லதீப்.

" அங்கிள் அப்போதை கோல் எடுத்திருந்தனீங்கள்? என்ன விசயம்?"

என்று அவன் கேட்க ஆனந்தராசா, சஜீவனைக் காணவில்லை என்ற தகவலை அவனுக்குச் சொன்னார்.

'அங்கிள் அவனுக்கு ஒண்டும் நடந்திருக்காது. நீங்கள் பயப்பிடாதையுங்கோ" என்று சொல்லிவிட்டு போனை வைத்த லதீப், சிலநிமிடங்களில் மீண்டும் போன் பண்ணினான்.

" அங்கிள், எதுக்கும் சஜீவன்ரை பைக் எங்கையும் நிக்குதோ எண்டு றோட்டின்ர ரண்டுபக்கமும் பார்த்துக்கொண்டு வாங்கோ. நானும் வாறன்' என்று சொல்லிவிட்டு லதீப் போனை 'கட்' பண்ணிவிட்டான். அதன்பிறகு ஆனந்தராசா பாதையின் இருபுறமும் தன் பார்வையை இன்னும் கூர்மையாகப் படரவிட்டார்.

ஆனால் எங்கேயும் சஜீவனின் மோட்டார் சைக்கிள் தென்படவேயில்லை.

மீண்டும் லதீப்பிடமிருந்து போன். இப்போது அவன் குரலிலும் பதற்றம் தொற்றியிருந்தது.

" அங்கிள், வவுனிக்குளத்தில ஒரு மோட்டர்சைக்கிள் நிக்குதாம். மரம் ஏத்திக்கொண்டு போன லொறிக்காரர் தான் தகவல் சொன்னவங்கள். சிலவேளை அது சஜீவன்ரையோ தெரியாது. நீங்களும் போங்கோ, நானும் அங்க வாறன்' என்று லதீப்பிடமிருந்து தகவல்கிடைத்தது. அதற்குமேல் ஒருகணமும் தாமதிக்காமல், வவுனிக்குளத்துக்கு விரைந்தார் ஆனந்தராசா.

அங்கே குளக்கட்டில் துருசுப்பகுதிக்கு அண்மித்ததாகச் சரிந்துகிடந்தது சஜீவனின் 'பைக்'.

அதைக் கண்டதும் ஆனந்தராசா விக்கித்துப் போனார். உலகமே தலையில் இடிந்து விழுந்துகொண்டிருந்தது.

ந

ஒரு நேர
'திடு
ரிப்போ

# சஜீவனின் சாவுக்குள் புதைக்கப்பட்ட சாட்சியங்கள்



கை
கட

## துருசுக்குள் தேடல்

குளக்கட்டில் மோட்டார் சைக்கிளை மட்டும் தான் கண்டுபிடிக்கமுடிந்ததே தவிர, சஜீவன் அங்கில்லை. அப்படியானால் இந்தக் குளக்கட்டுப் பகுதியில்தான் சஜீவனுக்கு என்னவோ நடந்திருக்கவேண்டும் என்ற எடுகோளில், அங்கு திரண்ட மக்கள் சஜீவனை சுற்றுப்புறமெங்கும் அந்த மம்மல் இருட்டிலும் தீவிரமாகத் தேடத்தொடங்கினர்.

'அண்ணை எதுக்கும் பொலிஸில முறைப்பாடு செய்யிறது நல்லம்' என்று அங்கிருந்தவர்கள் அறிவுறுத்த, நட்டாங்கண்டல் பொலிஸ் நிலையத்துக்குப் போய் 'சஜீவனைக் காணவில்லை' என முறைப்பாடளித்தார் ஆனந்தராசா. அந்தச் சமயத்தில் வவுனிக்குளப் பகுதியில் திரண்டிருந்த மக்களில் ஒரு பகுதியினர், திடீரென பாண்டியன்குளம் பக்கமாக விரையத்தொடங்கினர்.

'கடத்தின பெடியனை பாண்டியன் குளம் பள்ளிக்கூடத்தில கட்டிப்போட்டிருக்காம்'

இப்படி ஒரு தகவல் அங்கு பரவியமையே, அவர்கள் அப்படி தங்கள் தேடுதல் நடவடிக்கையைக் கைவிட்டு, பாண்டியன்குளத்துக்கு ஓடிச் செல்லக் காரணம். ஆனால் அந்தத் தகவல் உண்மையில்லை, யாரோ கட்டிவிட்ட வதந்தி என்பது அங்கு போனபின்னரே பலருக்கும் புரிந்தது. இருள் மறைந்து எங்கும் வெளிச்சம். ஆனால் சஜீவன் எங்கே? என்ற கேள்விமட்டும் இருள்மண்டிப்போய்க் கிடந்தது.

சஜீவனைக் குளக்கரையெங்கும் தேடிக்களைத்தவர்கள் கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தனர். மோட்டார் சைக்கிள் கண்டுபிடிக்கப்பட்ட துருசுக்குள் இறங்கிப் பார்ப்பது என்பதே அந்த முடிவு. தண்ணீர் பாய்ந்து கொண்டிருக்கும் போது துருசுக்குள் இறங்கினால் அதோ கதிதான். எனவே நீர்ப்பாசன அதிகாரிகளின் துணையோடு துருசு பூட்டப்பட்டது. பின்னர் நீச்சலில் அனுபவம் பெற்ற ஒருவர் அந்தத் துருசுப் பகுதிக்குள் இறங்கித் தேடத்தொடங்கினார். மேலோட்டமாகப் பார்க்கும் போது எதுவும் புலனாகவில்லை. தண்ணீருக்குள் மூழ்கித் தேடிய போது கையில் ஏதோ அகப்பட்டது. நன்றாகப் பார்த்தவர் அதிர்ந்தார்

துருசுக்குள் சிக்குப்பட்டு கிடந்தது ஒரு ஆணின் சடலம்.

## ' துருசுக்குள்ள பொடி


இந்தத் தகவல் நொடிக்குள் அந்தப் பகுதி
மக்களிடையே பெரும் பரபரப்பு. நட்டாங்கண்
யத்துக்குச் சென்றிருந்த ஆனந்தராசாவுக்
கிடைத்ததால், அவரும் பதறியடித்துக்கொண்
கம் ஓடி வந்தார்.

காலை எட்டுமணி. துருசுக்குள் சிக்கியிருந்த
மேலே கொண்டுவரப்பட்டது.

'கடவுளே, அது சஜீவனாக இருக்கக்கூடாது'
எல்லாத் தெய்வங்களையும் வேண்டிக்கொ
டிப்பார்த்தார். எந்தத் தெய்வமும் அவரது பிர
சாய்க்கவில்லை. அது, சஜீவனின் சடலமேதா
சிராய்ப்புக்காயங்கள். பொலிஸார் சடலத்தை
யும் தீவிரமாக அலசினர். மோட்டார் சைக்கி
னின் கைரேகைக்கு மேலதிகமாக வேறுசில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# நடுங்க வைக்கும் உண்மைகள்

...நரடி
...டிக்'
...போர்ட்



...கைவிட்ட
...கடவுள்

...டி இருக்காம்'

...குதியெங்கும் பரவியதும்
...கண்டல் பொலிஸ் நிலை
...ாவுக்கும் இந்தத் தகவல்
...கொண்டு குளக்கட்டுப் பக்

...ருந்த சடலம் ஒருபடியாக

...ாது' என்று ஆனந்தராசா
...கொண்டு சடலத்தை எட்
...து பிரார்த்தனைக்கு செவி
...மேதான். அவன் உடலில்
...த்தையும் சுற்றுப்புறத்தை
...சக்கிளில் இருந்து சஜீவ
...சில கைரேகைகள் கண்டு

பிடிக்கப்பட்டன. பார்த்தவுடனேயே சஜீவன் யாரோ சிலரால் கொல்லப்பட்டிருக்கிறான் என்பது புரிந்தது. மாங்குளம் நீதவான் நீதிமன்ற நீதிபதி மாலையில் வரும்வரை சஜீவனின் உடலம் அங்கேயே இருந்தது. சடலத்தினைப் பார்வையிட்ட நீதிபதி, உடற்கூறாய்வுப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவுகளிடம் கையளிக்குமாறும் உத்தரவிட்டார்.

அதன் பின்னர் சடலம் முல்லைத்தீவு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது. அதுவரை இதனை கொலை என்ற கோணத்தில் பார்த்து, கருத்துச் சொல்லிக்கொண்டிருந்த பொலிஸாரின் சுருதி மெல்ல மெல்ல மாறத் தொடங்கியது.

'பெரும்பாலும் இது தற்கொலைதான்'

என்று பொலிஸார் சொல்ல, அவர்களோடு சஜீவனின் தந்தை

"ஏன் இப்பிடி பொய் சொல்லுறீங்கள்? நீங்கள் கொலைகாரரைக் காப்பாத்த நினைக்கிறீங்களோ? உங்களை நான் நம்பமாட்டன், என்ர பிள்ளையை நான் வவுனியா ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோய் போஸ்ட்மட்டம் செய்து உண்மையைக் கண்டுபிடிப்பன்"எண்டு ஆனந்தராசா, ஆவேசமாக பொலிஸாரோடு தர்க்கித்தார். சுற்றிலும் நின்றவர்கள் அவரை ஆசுவாசப்படுத்தி, ஒருவழியாக உடற்கூறாய்வுக்கு சடலத்தை ஒப்படைக்க வைத்தனர்.

- சஜீவன் கழுத்து நெரிக்கப்பட்டே கொலை செய்யப்பட்டிருக்கிறான்.
- சஜீவனின் தொண்டைக்குள் மிக ஆழமாக துணி அடையப்பட்டிருக்கிறது.
- சஜீவனை கொன்றுவிட்டு, இரண்டு அல்லது மூன்று மணித்தியாலத்தின் பின்னரே அவனது சடலம் நீருக்குள் போடப்பட்டுள்ளது.

சட்டமருத்துவ அதிகாரி கனகசபாபதி வாசுதேவா உடற்கூறாய்வு செய்தபின் வெளியிட்ட அறிக்கையில் இருந்த இந்த முக்கியமான விடயங்கள் பொலிஸாரின் முகத்தில் கரியைப் பூசின.

அதன் பின்னர் B/980/24 எனும் இலக்கத்தை கொண்ட சஜீவனின் படுகொலை வழக்கு, மாங்குளம் நீதவான் நீதிமன்றில் ஓகஸ்ட் 19 முதல் நடந்துகொண்டிருக்கிறது. இந்தப் படுகொலையின் விசாரணை இப்போது பொலிஸாரிடமிருந்து குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டு விட்டது. ஆனால் சஜீவனைக் கொன்றவர்கள் யார்? ஏன் கொன்றார்கள்? எப்படிக் கொன்றார்கள்? என்ற கேள்விகளுக்கு இன்னமும் விடை கிடைக்கவில்லை.

## சஜீவன் சில குறிப்புகள்

சஜீவன் என்று சொன்னாலே மல்லாவியில் எல்லோருக்கும் தெரியும். அதேபோல 'பஸ்கார செல்லா' என்கிற ஆனந்தராசாவும் மல்லாவியில் பிரபலம். அந்த ஆனந்தராசாவின் இரண்டாவது மகன் தான் சஜீவன். அவனுக்கு ஒரு அண்ணன், ஒரு தங்கை.

யோகபுரம் மகாவித்தியாலயத்தில் படிப்பிலும் விளையாட்டிலும் கெட்டிக்காரனான சஜீவன் ஊர்த்தொண்டுகளிலும், பொதுவேலைகளிலும் முன்னிற்பவன்.

அரசவங்கி ஒன்றின் பிரிவான நிதி நிறுவனத்தில் பணியாற்றியவன். ஆனாலும் அந்த வேலைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, வெளிநாடு செல்லவேண்டும் என்ற கனவு நனவாகும் தருணத்திலேயே அவன் கொலையுண்டான்.

## காவு வாங்கியதா கடன்?

சஜீவன் பணிபுரிந்த அதே நிதிநிறுவனத்தில் இன்னொரு யுவதியும் வேலை செய்துகொண்டிருந்தார். அவருக்கும் சஜீவனின் நண்பன் லதீப்புக்கும் நல்லபழக்கம். அதனால் தன்னுடைய தொழில்நடவடிக்கைகளுக்காக அந்த யுவதியிடம் லதீப், பணத்தை பெற்றுக்கொள்வது வழமை. அந்த யுவதியும் சில சமயங்களில் தன்னிடம் பணமில்லாவிட்டால், நிறுவனத்தின் பணத்தை எவருக்கும் தெரியாமல் லதீப்புக்கு கொடுப்பாள். லதீப்பும் அந்தப் பணத்தை வைத்து தொழில் நடவடிக்கைகளை முடித்துவிட்டு, திருப்பி ஒப்படைப்பான். அந்த யுவதி மீண்டும் பணத்தை இருந்த இடத்தில் வைத்துவிடுவாள். இந்தப் பணக்கொடுக்கல் வாங்கல் நீண்டநாட்களாகத் தொடர்ந்தது.

ஆனால் திடீரென ஒருநாள்,எவரும் எதிர்பாராத வகையில் தலைமையகத்தில் இருந்து வந்த அதிகாரிகள், கணக்குவழக்குகளைச் சல்லடை போட, அந்த யுவதி சிக்கிக் கொண்டாள், பெருந்தொகைப் பணம் எப்படி வெளியே போனது? என்று அதிகாரிகள் போட்ட கிடுக்கிப்பிடியில் அவளால் தப்பமுடியவில்லை. 'தனிப்பட்ட தேவைக்காக எடுத்தன்' என்று அவள் பழியை ஏற்றாள். நிறுவனத்தின் நம்பிக்கையை அவள் இழந்ததால் உடனடியாக வேலையில் இருந்து இடைநிறுத்தப்பட்டாள்.

'நீங்கள் செய்தவேலைக்கு பொலிஸில குடுத்திருப்பம், பாவம் பொம்பிளைப் பிள்ளையெண்டு பாக்கிறம். எடுத்த காசை முழுசாத் திருப்பித் தராட்டி பிறகு நாங்கள் பொலிஸிலதான் குடுக்க வேண்டி வரும்' என்று அவளுக்கு பணத்தை மீளச்செலுத்த காலக்கெடு வழங்கப்பட்டது.

அவளுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. முன்னர் அவளுக்கு பணத்தட்டுப்பாடு வந்த சமயங்களில் சஜீவனிடம் கடனாகப் பெற்றிருக்கிறாள். எனவே இம்முறையும் அவள் சஜீவனிடமே கடன் கேட்டிருக்கிறாள். பெருந்தொகைப் பணம், ஆனால் இல்லையென்று சொல்ல சஜீவனால் முடியவில்லை. ஒன்று, தன் நண்பன் லதீப்புக்கு உதவிசெய்யப் போய்த்தான் அவள் இப்படியொரு சிக்கலைச் சந்தித்திருக்கிறாள், இன்னொன்று சக பணியாளினி. லதீப்பும் தன் நண்பனான சஜீவனிடம், அவளுக்கு பணம் கொடுக்கும்படி கெஞ்சினான். வேறுவழியின்றி, தான் வெளிநாடு போகவென்று சேர்த்துவைத்திருந்த பணத்தை அவளது கணக்குக்கும், அவளின் தங்கையின் கணக்கிலக்கத்துக்கும் அனுப்பி வைத்தான் சஜீவன்.

ஆனால், வாக்குறுதியளித்தபடி அந்த யுவதி சஜீவனின் பணத்தை திருப்பிச் செலுத்தவில்லை. 'இப்போ தருகிறேன், அப்போ தருகின்றேன்' என அவள் இழுத்தடித்துக் கொண்டிருப்பதாக சஜீவன் தன் நண்பர்கள் சிலரிடம் சொல்லியிருக்கிறான். வெளிநாட்டுக்குச் செல்வதற்காக பணம் முழுதும் தேவைப்பட்டதால், ஜூலை 29 ஆம் திகதி (கொலை நடந்த தினத்தன்று) அந்த யுவதியிடம் தான் கொடுத்த கடனை வாங்கவே சஜீவன் சென்றான் என சிலர் கூறுகின்றனர். வீட்டாருக்கு சஜீவன், அந்தப் பெண்ணுக்கு கடன் கொடுத்த விடயம் தெரியாது. எனவேதான் ' டொலராக காசை மாற்றப்போகின்றேன்' என்று சொல்லிவிட்டு, அங்கே சென்றிருக்கலாம் என்றும் சிலர் ஊகிக்கின்றனர். இந்தக் கடனுக்கும், கொலைக்கும் நிச்சயம் சம்பந்தமிருக்கும் என்று ஊரவர்கள் அடித்துச் சொல்கிறார்கள். ஆனால் பொலிஸார், இந்தக் கடன் விவகாரத்தை ஏன் விசாரிக்கவில்லை என்பது விடைதெரியாக் கேள்வியே.

## நண்பனைச் சூழ்ந்த சந்தேகமேகம்

சஜீவனின் கொலையோடு பல இடங்களில் தொடர்புறும் ஒரு நபர் லதீப். நிதிநிறுவனத்தில் பணிபுரிந்த யுவதிக்கு சஜீவன் கடன் கொடுத்த விவகாரத்தில் லதீப்பின் தலையீடும் அதிகம். அத்தோடு லதீப்பிடம் இருந்த 'கே.டி. எச்.' ரக வாகனம், பெரும்பாலும் சஜீவன் வீட்டிலேயே நிறுத்தி வைக்கப்படும். சம்பவ தினத்தன்றுகூட, 'கே.டி. எச்.' ரக வாகனம் சஜீவன் வீட்டில் தான் நின்றிருந்தது. அன்றிரவு சஜீவன் இறுதியாக வீட்டை விட்டு வெளியேறிய பின்னர் இரவு 8 மணியளவில் அங்குவந்த லதீப் அந்த 'கே.டி. எச்.' ரக வாகனத்தைக் கொண்டு சென்றிருந்தார். லதீப்பின் வீட்டில் போதிய இடவசதி இருந்தும், சஜீவனைப் போல வேறுபல நண்பர்கள் இருந்தபோதும் எதற்காக லதீப் தனது வாகனத்தை சஜீவனின் வீட்டிலேயே தொடர்ந்தும் தரிக்க வைத்தார்? ' அந்த வாகனத்தில போதைப்பொருள் கடத்திறவங்கள், தன்ர வீட்டில நிண்டால் பிடிபட்டுப் போடும் எண்டுதான் சஜீவனுக்கு அதைச் சொல்லாமல் அவன்ர வீட்டில உந்த கே.டி.எச்சை லதீப் நிப்பாட்டிறவன்' என்று ஊரவர்கள் சொல்வது உண்மையா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நட்பும் சில கேள்விகளும்

## யாருடைய கார்?

சஜீவனின் வீட்டில் WP CAW 1743 எனும் இலக்க வெள்ளை நிறக்கார் ஒன்று நின்றது. அதனை சஜீவன் வாங்கியிருந்தபோதும், தன் பெயருக்கு காரின் பதிவுகளை சஜீவன் மாற்றியிருக்கவில்லை. காரைக் கொள்வனவு செய்த மகிழ்வில், சில நாட்களுக்கு முன்னர்தான் அந்தக் காரில் கோயிலுக்குச் சென்று , காருக்கு பட்டுத் துணியை சஜீவன் கட்டியிருந்தார்.

இந்தநிலையில், 29.07.2024 அன்று காலை சஜீவனின் இன்னொரு நண்பன் அங்கு வந்து, அந்தக் காரை எடுத்துச் சென்றிருக்கிறார். இதனைக்கண்ட சஜீவனின் தாய்,

"ஏன் தம்பி, உன்ர காரை அவன் கொண்டு போறான்?" என்று கேட்டிருக்கிறார்.

'ஹயர் ஒண்டு வந்திருக்காம். அதுதான் லதீப் சொல்லி, இவன் வந்து எடுத்துக்கொண்டு போறான். இரவு கொண்டந்திடுவான்'என்று சஜீவன் விளக்கம் சொல்லியிருக்கிறான். ஆனால் அந்தக் கார் இன்னமும் சஜீவன் வீட்டுக்கு வந்து சேரவில்லை. அது வட்டக்கச்சியில் லதீப்பின் கட்டுப்பாட்டிலேயே இருக்கிறது.'கே.டி.எச். வாகனத்தை மாதிரி காரும் சஜீவன்ர வீட்டில நிண்டாலும், ரண்டும் எங்கடதான்' என்பது லதீப் தரப்பின் வாதம். அந்தக் காரை அவர்கள் அண்மையில் விற்க முயன்றபோது, பொலிஸார் தலையிட்டு, அதை விற்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காரை ஏன் ஹயர் வந்திருப்பதாகச் சொல்லி லதீப் இன்னொரு நபரை விட்டு எடுக்க வேண்டும்? பின்னர் ஏன் அதைத் தன்னுடையதென்று சொல்லவேண்டும்? பின்னர் ஏன் அதை அவசரமாக விற்க முயல வேண்டும்?

## பதிலளிக்கத் தாமதம் ஏன்?

சஜீவனைக் காணவில்லை என்று அவனது வீட்டார் பதறியடித்துக்கொண்டு போன் எடுத்தபோதும், அதற்கு உடனடியாக லதீப் பதிலளிக்கவில்லை. பலமணி நேரம் கழித்தே, (சஜீவன் கொல்லப்பட்டு குளத்தில் போடப்பட்ட பின்னரே) அதிகாலை 3 மணியளவில்தான் லதீப் சஜீவனின் தந்தை ஆனந்தராசாவுக்கு போன் செய்திருக்கிறார். நள்ளிரவுநேரத்தில் ஒரு தொலைபேசி அழைப்பு வந்தால், அது ஏதோ அவசரமானது என்பது எல்லோருக்குமே தெரியும். அப்படியிருந்தும் உடனடியாகப் பதிலளிக்காமல், மிக நீண்ட நேரத்தின் பின்னர் ஏன் லதீப் போன் செய்தார்?

## எப்படித் தெரியும்?

'சஜீவனைக் காணவில்லை, தேடுகிறோம்' என்று ஆனந்தராசா போனில் தகவல் சொன்ன பின்பு, மீண்டும் தானே போன் பண்ணி " அங்கிள், எதுக்கும் சஜீவன்ரை பைக் எங்கையும் நிக்குதோ எண்டு றோட்டின்ர ரண்டுபக்கமும் பார்த்துக்கொண்டு வாங்கோ." என்று லதீப் வலிந்து சொல்ல வேண்டிய காரணம் என்ன? சஜீவனின் 'பைக்' எங்கோ அநாதரவாக நிறுத்தப்பட்டிருக்கும் என்பது லதீப்புக்கு எப்படித் தெரியும்?

# சில சந்தேகங்கள்....

### சந்தேகம் 1

குளக்கரையில், சஜீவனின் மோட்டார் சைக்கிள் அநாதரவாகக் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர், அதற்கு அருகில் தான் சஜீவனும் இருக்க வேண்டுமென்று எல்லோரும் தேடிக்கொண்டிருந்தபோது, 'சஜீவனை பாண்டியன்குளம் பள்ளிக்கூடத்தில கட்டிப் போட்டிருக்காம்' என்றொரு வதந்தி பரவி, அங்கு நின்றவர்களில் பலரும் பாண்டியன்குளத்துக்கு ஏன் திசை திருப்பிவிடப்பட்டனர்? அப்படி திசைதிருப்பும் நோக்கோடு வதந்தியைப் பரப்பியவர் யார்?

### சந்தேகம் 2

ஒருவேளை அது வதந்தியாக அல்லாமல் , சஜீவனை பாண்டியன்குளம் பாடசாலையில் தான் கொலை செய்துவிட்டு குளத்தில் கொண்டுவந்து சடலத்தை போட்டார்களா? கொலையாளிகள் பாண்டியன்குளம் பாடசாலையில் சஜீவனைக் கட்டிவைத்திருந்தபோது கண்டவர்கள் எவராவது பயத்தில் முதலில் உண்மையைச் சொல்லாமல், பின்னர் குளக்கரையில் அந்தத் தகவலை வெளியிட்டதால் தான் மக்கள், பாண்டியன்குளம் பாடசாலைக்கு சஜீவனைத் தேடிப் போனார்களா?

### சந்தேகம் 3

சஜீவனைக் காணவில்லை என்று அவனது நண்பர்களுக்கு குடும்பத்தார் போன் செய்தபோது,

" சஜீவனோட எட்டே முக்கால் போல கதைச்சனான். திடீரெண்டு பொலிஸ்காரர் கண்ணுக்க லைட் அடிக்கிறாங்கள் பிறகு எடுக்கிறன் எண்டிட்டு வைச்சிட்டான். அதுக்குப் பிறகு கோல் பண்ணேலை' என்று சஜீவனோடு நிதிநிறுவனத்தில் பணிபுரிந்த நண்பர் ஒருவர் கூறியிருந்தார். அதை அவர் பொலிஸ் நிலையத்திலும் சென்று மீண்டும் பதிவு செய்திருந்தார். அப்படி சஜீவனுக்கு முகத்தில் லைட் அடித்து மறித்தது பொலிஸ்தானா? அல்லது கொலையாளிகளா? ஒருவேளை கொலையாளிகள் தான் அப்படி சஜீவனை மறித்திருந்தால் அந்தநேரத்தில்,அந்த இடத்தில் சஜீவன் வருவான் என்று எப்படி அவர்களுக்குத் தெரியும்? அவர்கள் தான் சஜீவனை அந்த இடத்துக்கு வரவழைத்துக் கொன்றார்களா?

### சந்தேகம் 4

சஜீவனின் மோட்டார் சைக்கிளுக்குள் இருந்து அவனது போன் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளது. அந்தப் போனுக்கு உள்வந்த அழைப்புகள், வெளிச்சென்ற அழைப்புகள் என்பவற்றை ஆராய்ந்தாலேயே ஓரளவுக்கு கொலையாளிகளை நெருங்கியிருக்கலாம். அந்தப் போனின் கடவுச்சொல் சஜீவனின் குடும்பத்தாரால் வழங்கப்பட்டு, உள்ளிருக்கும் தகவல்களைப் பொலிஸார் பார்வையிட்டு, அதில் சில தரவுகள், குறுஞ்செய்திகள் இருப்பதாக பொலிஸார் கூறிருந்தனர். ஆனால் போனில் எந்தவிதமான தரவுகளும் இல்லையென்று இப்போது பொலிஸார் சொல்கின்றனர். பொலிஸாரின் கட்டுப்பாட்டில் போன் இருக்கும் போது அதில் இருந்த தரவுகள், குறுஞ்செய்திகள் மாயமானது எப்படி? இந்தக் கொலைவழக்கில் முக்கியமான தடயப்பொருளான போனை வைத்தே கொலையாளிகளைக் கண்டுபிடிக்க வாய்ப்பிருந்தும் அதனை ஏன் பொலிஸார் கோட்டை விட்டனர்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சந்தேகம் 5

- சஜீவன் கொலை தொடர்பாக அவனது பெற்றோரிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தை பொலிஸார் திரிவுபடுத்தி எழுதியுள்ளனர். அதற்கு என்ன காரணம்?


- இந்தக் கொலை தொடர்பான விசாரணைகளின் போது சில இடங்களில் இருந்து சி.சி.ரி.வி காணொலிகளை பொலிஸார் பெற்றிருக்கிறார்கள். ஆனால் அவற்றை அவர்கள் நீதிமன்றில் ஏன் இன்னும் சான்றுப்படுத்தவில்லை ?

உடற்கூறாய்வுப் பரிசோதனைக்காக சடலத்தைக் கொண்டுசென்ற போது 'இது தற்கொலையாக இருக்கும். நீங்கள் சடலத்தை வாங்கிச் செல்லுங்கள்' என சஜீவனின் பெற்றோரிடம் பொலிஸார் கூற வேண்டிய அவசியம் என்ன?

### சந்தேகம் 6

வவுனிக்குளத்தில் இருந்து சஜீவனின் சடலம் மீட்கப்பட்டபோது, அவனது நண்பர்கள் சிலர் அங்கிருந்து நழுவியுள்ளனர். அவர்கள் சஜீவனின் வீட்டுக்குச் சென்று அங்கு சஜீவன் தான் கடன்கொடுத்தவர்கள் தொடர்பான விவரங்களை எழுதி வைத்திருந்த கணக்குக் கொப்பிகளை எடுத்துச் சென்றுள்ளனர். அப்படி அவர்கள் கணக்குக் கொப்பியை எடுத்துச் சென்றதன் பின்னணி என்ன? அவர்கள் தாமாகவே அதை எடுத்தார்களா அல்லது வேறு எவரேனும் அவர்களைப் பயன்படுத்தி குறித்த கணக்கு கொப்பியை அங்கிருந்து அகற்றினார்களா?





## ஓயாத போராட்டம்

சஜீவன் ஏன் கொல்லப்பட்டான்? என்ற கேள்விக்கு விடைதேடியும், அவன் சாவுக்கு நீதி கோரியும் அவனது குடும்பத்தார் மட்டுமல்லாது, மல்லாவி மக்களும் போராடி வருகின்றனர். சஜீவன் கொல்லப்பட்டு 19 நாட்களின் பின்னர்(16.08.2024 அன்று) மல்லாவியில் ஒரு மக்கள் போராட்டம் நடத்தப்பட்டது. சஜீவனின் சாவுக்கு காரணமான சந்தேகநபர்களை ஏன் இன்னும் கைது செய்யவில்லை? என்று கோரியே அந்தப் போராட்டம் நடத்தப்பட்டிருந்தது. ஆனால் அதன் பின்னரும் விசாரணைகளில் பெரியளவு முன்னேற்றம் இல்லை. சஜீவனின் படுகொலை பற்றிய விசாரணைகள் குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் கையளிக்கப்பட்டதைத் தவிர வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அதனால் சஜீவன் படுகொலையுண்டு ஓராண்டுகடந்த பின்னும் அவனது சாவில் மறைந்திருக்கும் மர்மமோ, கொலையாளிகளோ கண்டுபிடிக்கப்படவேயில்லை.

அதனால் மீண்டும் மக்கள் 29.07.2025 அன்று மல்லாவியை முடக்கி போராடினார்கள். இந்தப் போராட்டத்தில் மக்கள் வைத்த கோரிக்கையை ஏற்று இனியாவது சஜீவனின் கொலையில் ஒளிந்திருக்கும் மர்மங்களைத் துலக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

நீதிக்கான காத்திருப்பு இன்னும் எத்தனை காலம் தான் நீள்வது?

# நிரஞ்சனா

ஆனந்தி

போரின் கவிதை



26

பஞ்சம் பிடித்த வீடு...
பிடி அரிசி இல்லை...
பள்ளியால் வரும் பிள்ளைக்கு
எதைக் கொடுப்பேன்?
போதையை ஏற்றிக் கொண்டு
சுயநினைவை இழந்து கிடக்கும்
போர் வீரனின் சரீரம்
மல்லாக்காகக் சரிந்து
அம்மணமாகிக் கிடக்கிறது!

கொடிய போரின் கோரத்தாண்டவத்தில்
அழகிய மனங்கள் சிதைந்து
ஆவேசக் குணங்கள் கூடி....
கண்டவரையெல்லாம்
கொன்று விடத் துடிக்கும்
ஒரு முன்னை நாள்
போராளியின் மனம்
விசங்களைக் குடித்து நினைவுகளை
மறக்க முயல்கிறது..

செல்வத்துடன் பிறந்து பெற்றவர்
மடிமீது துள்ளி விளையாடி
செல்ல மகளாகிய காலங்கள்
மீண்டும் வராமல்
போர் தின்று விழுங்கியது ...
எல்லோரையும் இழந்து
இயலாமையால் வாடும்
ஒரு போராளியின் மனைவி..
போர்க்களத்தில் நின்றவள்
சபிக்கப் பெற்றவளாக...

ஆயுதம் தாங்கி நின்று
எமக்காகப் போராடியவன்
அவன் ஆளுமையும் ஆகிருதியும்
என் மனதில் பதிந்தன...
அந்தப் பதின்ம வயதில்
அவன் மீதான காதல்..
பைத்தியமாக்கியது...
அவனில்லா வாழ்வை வெறுத்தேன்...
போராட்டத்தின் முழுவதிலும்
முக்கியமானவன், நிமிர்ந்த தோற்றம்
விசாலமாக உள்ளத்தினுள்ளே
உறுதியாக பதிந்திருந்தது....

தனிநாடு வேண்டும் தமிழராக
வாழ வேண்டும் என்று எப்போதும்
ஒப்பித்துக் கொண்டிருப்பான்..
தாயை விடவும் நாட்டை நேசித்தவன்..
குண்டடிபட்டு தாய் உயிர் நீர்த்தபோது
கண்ணீர்விடாமல் கல்லாக இருந்தான் !
தாயைக் கொன்றவர்களைக்
கொல்வேன் என்னும் சபதம்
அவன் கண்களில் இருந்தது!

தானைத் தலைவனைக் கடவுள் என்றான்
போராளிகளை மட்டும்
தன் உறவு என்றான்
சுவாசம் முழுவதும்
தேசாபிமானம் ஒடித்திரிந்தது..
இரத்த ஓட்டத்தில் தாயகம் பற்றிய
சிந்தனை துள்ளி விளையாடியது..

அவன் மீதான காதல்
என்னை பைத்தியமாகியது..
அவன் மறுத்துப் பேசினான்
போராளிகளுக்கு வாழ்வில்லை என்பது
மந்திரமாக ஒலித்துக் கொண்டது
ஒருதலைக் காதலால் வெந்து துடித்தேன்
அவன் பின்னே திரிந்தேன்..

போராட வா என்றான்!
வழியின்றிப்போனேன்....

பிரிவுகள் வந்தன...துன்பங்கள்
துரத்தின..
எல்லாம் வென்றோம்!
என் காதலை மதிக்காமல்
தேசத்தின் விடுதலைக்காக
முழுவதுமாகி இயங்கிக் கொண்டான்...

காலம் அவன் தேவையை
நிராகரித்தது...
காட்டு வெளியெங்கும் ஒளித்து
வாழ்ந்தோம்
ஆயுதங்களைத் தூக்கி கொண்டு
அடர்ந்த காடெல்லாம் அலைந்தோம்.

ஒரு நாளேனும் தன் காதலை
அவன் எனக்குத் தரவில்லை
இறுக்கமாக இருந்த அவனது இதயம்
இறுதி வரை வெற்றியை நோக்கியே
வெறித்தனமாகப் போராடியது !

எல்லாம் மாறிப் போனது
எதிரியின் கையோங்கி..
கைதிகளாகி நின்றபோது..
நச்சுக் குப்பியை நசிக்கப்போனபோது
இழுத்து அறுத்தேன்...

என் உயிரை கொல்ல நான்
தயாரில்லை
வாழ வேண்டுமென்று தான் என்
இதயம்
ஆண்டவனைப் பிரார்த்தித்தது....
செத்துப் போன தாய்க்காக
அழாதவன் இப்போது
விக்கி விக்கி
அழுது கொண்டிருந்தான்.
அவனது அழுகை
எதிரிக்குச் சிரிப்பாக இருந்தது..
இராணுவம் சூழக் கைகளைக் கட்டி
தலையைக் கவிழ்ந்து நின்ற போது
இந்த உலகமே..
அழிந்து போனதாக உணர்ந்தேன்..

எத்தனை கனவுகளோடும்
உயரிய நம்பிக்கையோடும்
போராடிய ஒரு தீரமான
போராளியின் கைகள் கட்டப்பட்டு
சங்கடமிக்க சொற்பதங்களால்
மனவெளிகளை கீறிக்கிழித்து..
தோற்றுப்போனாய் என்பதை
மீண்டும் மீண்டும் சொல்ல
அவனது கண்களில் இருந்து
நீர் ஓடிக் கொண்டிருந்து..

அவனைக் காப்பாற்ற
நான் அவர்களின் கால்களில்
விழுந்தேன்.. கணவர் என்றேன்
வயிற்றில் கரு இருப்பதாக
சொன்னேன்..
தாய்மைக்கு மதிப்பளித்தவர்களாக
இருவரையும் போகும்படி
உத்தரவிட்டார்கள்....

ஜீரணிக்க முடியாத அந்த விடுதலை
நெஞ்சு முழுக்க மகிழ்வை
விதைத்தாலும்..

வாழ்வை விட இறப்பு மகிழ்வானது
என்பதை அந்த விடுதலை எனக்கு
கற்பித்து முடித்தது!

போராட்டக்களத்தின்
தீவிரமான போராளிகள்
சிறுகாயமும் இல்லாமல்
தப்பிவந்ததேன்?
காலம். எம் இருவரையும்
ஏன் காப்பாற்றிக் கொடுத்தது?

ஏமாற்றம்..எதிரியின் வெற்றி
அவனது சிந்தனைகளில் கலக்கத்தையும்
மூளையில் முரண்பாட்டையும்
கொடுத்தன........
வாழ்வதே தண்டனையெனக் கருதினோம்...

தோல்வியைத் தாங்க இயலாதவன்
தோற்றமும் மறதிக் குணங்களும்
மாறி... மனநோயாளி போல
மறுகத் தொடங்கினான்...
இவன் இறந்து போயிருக்காலாம்
என்னும் எண்ணம் வர வதைகள்
செய்தான்..
வாழ விரும்பவில்லை...

திருமண வாழ்வு முழுவதும்
மனங்களைக் குடையும்
நினைவுப் புழுக்கள்...
அவள் மூளை முழுவதும்
ஊர்ந்து திரிந்தன....

கர்ப்ப காலத்தில்
கால்களால் உதைத்தான்
கர்ப்பத்தின் மீது எட்டி அடித்தான்
சோற்றுக் கீலங்களைச் சுவரில்
எறிந்தான்...
பிள்ளைகள் மீதும்
வன்மத்தை சொரிவான்!

போதை தலைக்கேறி
கோபம் விசமாகியும்
ஒவ்வொரு நொடியிலும் அவன்
மூளை பலமிழந்ததாக
அழுது வடிந்தது.. மூர்க்கம் கொண்டு
கொந்தளித்தது....

பள்ளிக்குப் போகவில்லை
கல்விகற்கவில்லை..
படிக்கத் தெரியாது..
தொழிலொன்றும் இல்லை...
துயரம் மட்டும்
மனை முழுவதும் தேங்கி நிற்கிறது..

அவர்கள் அழைக்கும் போதெல்லாம்
விசாரணைக்குப் போக வேண்டும்!

போராட்டமொன்றின்
காவல் தெய்வமாக
இருந்தவன்.. ஒரே இரவின்..
மாற்றம் சகிக்க இயலாமல்
வாழ்வாதாரம் இன்றி
வாழும் நிலை கண்டு
தாங்கிக் கொள்ள முடியாத

மனவலியில் அவன் உள்ளம்
உடைந்து உருகி.. உருக்குலைந்து
மனநோயாளியாக மாறியிருக்கிறது..

போரில் மானபங்கப்பட்ட
மனநோயாளியின் மனைவியாக நான்..
சிறைக்கூடத்துக்குள் சிக்கியிருந்து
சித்திரவதைகளை அனுபவிக்கும்..
கைதியின் நிலையாகி......

என்கனவுகள் அனைத்தும்
கரைந்து போயின..
நான் கொண்ட காதல் எனக்கே
நஞ்சாகியது.....
குடித்தே வதைக்கும்
முன்னாள் போராளியின்
இந்நாள் நிலை பற்றி..
யாருக்குச் சொல்வேன்?
காதலித்த பாவம் என் கருவறைக்கும்
சென்று.. பாவமறியா பிஞ்சு
நெஞ்சங்களையும் வதைத்து
பட்டினியும் வறுமையும்
வதைக்கும்
கொடிய நிலையைக் கொடுத்த
போர் தொலைந்தும்
போராடுகிறேன்!

எல்லாவற்றையும் இழந்து
எதுவுமே இல்லாமல்..
உறவுகளையும் தொலைத்து
அன்புநிலை தொலைத்து
அமைதியற்று ...
வன்முறைக்கு ஆட்பட்ட
இந்நிலையைக் கொடுத்தோரே!

போருக்கென நீர் வளர்த்த
கடாவொன்று...
தன்னையே
முட்டி மோதி தன் குலத்தை
நாசம் செய்யும்
துர்ப்பாக்கிய நிலையை
ஏன் கொடுத்தீர்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்தும் அறியாமலும்

எம்.முபாறக்

## 'அப்செட்' அம்மணி!



முன்னாள் ஜனாதிபதிகளை அவர்கள் தற்போது வசிக்கும் அரச இல்லங்களில் இருந்து குடியெழுப்புவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது அல்லவா. ஆனால் சந்திரிகா அம்மையாருக்கு இப்போது தங்கி இருக்கும் வீட்டை காலி செய்வதற்கு விருப்பமில்லையாம்.

இதனால் அவர் அரசுடன் ஒரு டீல் ஒன்று பேசியிருக்கிறாராம். 'நான் அந்த வீட்டிலேயே இருக்கிறேன் .அதற்கு வாடகை தருகிறேன்' என்பதுதான் அந்த டீலிங்.

இந்த ஆசையை வெளிப்படுத்தி முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகளை நீக்குவது தொடர்பில் ஆராயும் குழுவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார் அம்மணி.

அந்தக் குழுவும் அம்மணிக்கு பதிலும் அனுப்பியுள்ளது. ' முதலில் அந்த வீடுகள் பொருத்தமான வேலைத் திட்டங்களுக்காக டெண்டர் போடப்படும் ,விரும்பினால் நீங்களும் டெண்டர் போட்டு எடுக்கலாம்' என்று வந்த பதிலால் அம்மணி கடும் 'அப்செட்'.

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

## வடமாகாணத்தை இலக்கு வைக்கும்...

2) யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடமாகாணத்தில் அரச திணைக்களங்கள், மருத்துவமனைகள் அனைத்திலும் சிங்கள உயர் அதிகாரிகள் நியமிக்கப்படும் நிலை. (ஏற்கனவே சிங்கள அதிகாரிகள் சிலர் நியமனம் பெற்றுள்ளனர்)

ஆகவே, ஊழல் மோசடிகளை நிரூபிக்கக் கூடிய முறைமைகளை பொருத்தமாகவும், உரிய முறையிலும் பயன்படுத்தி மக்களுக்கு உண்மைகளை பகிரங்கப்படுத்தினால் நல்லது.

மாறாக, 'பரபரப்பு' 'விடுப்பு' என்ற வியூகங்களில் பேசி நேர்மையாகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் அரச தமிழ் அதிகாரிகள் சிலருக்கு மன உளைச்சலை ஏற்படுத்தக் கூடாது.

இலங்கை ஒற்றையாட்சி அரசு 2009 இற்குப் பின்னர் வடக்கு - கிழக்கில் உளவியல் ரீதியாக என்ன செய்யவேண்டும் என்று நினைத்ததோ, அதற்குத் துணை போகும் பிரதிநிதிகளாக இருக்காமல், அரசு அற்ற இனத்தின் பிரதிநிதியாகவும், குறைந்த பட்சம் அங்குள்ள அரச திணைக்களங்கள் மருத்துவமனைகள் போன்றவற்றின் செயல்பாடுகளை மேம்படுத்த அந்த சிறப்பான மூளையை நன்கு பயன்படுத்தவேண்டும்.

விளக்க குறிப்புகள்

1) இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்புகள் அதன் சட்டங்கள் முறைமைகள் (System) என்பதுதான் பிரச்சினை. 1950களில் அகிம்சை வழியில் போராடி அந்தப் போராட்டம் அடக்கப்பட்டு பின்னர் ஆயுதப் போராட்டம் ஆரம்பித்தது. போராட்டம் 2009 இல் ஒழிக்கப்பட்டது.

2) ஆகவே, அதன் பின்னரான சூழலில் இலங்கை நாடாளுமன்றத்தில் மக்கள் பிரதிநிதியாக இருக்க விரும்பினால், குறைந்த பட்சம் அந்த அரச முறைமைகள் ஊடாகத்தான் பிரச்சினைகளைக் கையாளவேண்டும். ஆனால் தமிழர்கள் சார்ந்த விடயத்தில் Unitary State System ஒருபோதும் அனுமதிக்காது என்பதை குற்றச்சாட்டுகளை முன்வைத்த உறுப்பினர் புரிந்திருக்கவேண்டும்.

3) அதைவிடுத்து குற்றச்சாட்டுகளை அடுக்கி, ஒட்டுமொத்த சமூகத்தையும் கேவலப்படுத்தி காணொலிகளை வெளியிட்டால், பார்வையாளர் எண்ணிக்கை மாத்திரமே அதிகரிக்கும்.

**கேள்விகள் குறிப்புகள்**

1) நாடாளுமன்றத்தில் குற்றச்சாட்டுகளை முன்வைத்தும் இதுவரை ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை?

இதற்கு குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விடைதேடவேண்டும்.

2) வடமாகாண ஆளுநரால் மாவட்ட அரச அதிபர்களை கட்டுப்படுத்த முடியுமா?

இல்லை! ஏனெனில் அரச அதிபர்கள் மத்திய அரசின் நேரடி அதிகாரிகள். (ஆனால் சந்திரசிறி ஆளுநராக இருந்தபோது அரச அதிபர்களை கட்டுப்படுத்த முடிந்தது. அதற்கான அரசியல் காரணம் வேறு)

3) ஆகவே 13 ஆவது திருத்தச் சட்டத்தின் குறைபாடுகள் தான், ஊழல் மோசடிகளுக்குக் காரணம். எனவே அரச முறைமையில் பிரச்சினைகள் உண்டு என்பதை புரிந்து கொண்டு, தமிழ்ச் சமூகத்தின் நாகரிகம் சுயமரியாதை ஆகியவற்றை கேள்விக்கு உட்படுத்தும் விடயங்கள் பற்றி பேசுவதைத் தவிர்ப்பதே ஆரோக்கியமான தமிழ் அரசியலாக இருக்கும்.

## வரிசையில் பல வீடுகள்



உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து மஹிந்தவை அரசு விரட்டினாலும் அவர் நடு ரோட்டில் நிற்கப்போவதில்லை. அவருக்கு கொழும்பிலேயே வீடுகளை வழங்குவதற்கு பலர் முன்வந்துள்ளனர். வெளிநாட்டில் உள்ள மஹிந்தவின் விசுவாசி ஒருவர் மஹிந்தவைத் தொடர்புகொண்டு பேசியுள்ளார்.

கொழும்பில் இருக்கின்ற தனது ஆடம்பர வீட்டை மஹிந்தவுக்கு வழங்க அவர் முன்வந்துள்ளார். இப்படி பல வீடுகள் மஹிந்தவுக்காக வரிசையில் உள்ளனவான். அவற்றில் ஒன்றைத் தெரிவு செய்வதில் மஹிந்த உறுதியாக இருக்கிறார். ஆனால், இப்போது அந்த வீடுகளுக்கு மஹிந்த போகமாட்டாராம். அரசு விரட்டும் வரைக்கும் வெளியேறுவதில்லை என்ற முடிவில்தான் அவர் இப்போதும் உள்ளார் என்று நெருக்கமானவர்கள் சொல்கின்றனர்.



மாணவர்களே!

நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

## இதுதான் அரசியல்


சில வாரங்களுக்கு முன் மஹிந்த ராஜபக்ச சுகவீனமுற்றிருந்தார் அல்லவா. அந்தக் காலப்பகுதியில் அவரை யாரும் போய்ப் பார்க்கவில்லையாம். பேச்சுத் துணைக்குக்கூட ஆளில்லாமல் அவர் மிகவும் கஷ்டப்பட்டிருக்கிறார்.

இந்தப் பரிதாபத்தைப் பொறுக்க முடியாத அவரது பாதுகாப்பு அதிகாரி மஹிந்தவுக்கு நெருக்கமான சிலருக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்து உதவி கேட்டுள்ளார்.

"சேர்…தனிய இருக்கார்.பேச்சுத் துணைக்குக்கூட யாரும் இல்லை.கொஞ்ச நேரம் வந்து சேரோட பேசுங்களன்" என்று கெஞ்சி இருக்கிறார். ஆனால்,அப்போதெல்லாம் வராதவர்கள் இப்போது மஹிந்தவின் வீட்டில் நிறைந்து கிடக்கிறார்கள்.மஹிந்தவை வீட்டை விட்டு அரசு விரட்டப் போகிறது என்ற செய்தி வெளியாகியமைதான் இதற்குக் காரணம். கிராமங்களில் இருந்து மக்களை அழைத்து வந்து மஹிந்தவிடம் சுகம் விசாரிக்க வைப்பதும், மஹிந்தவின் உத்தியோகபூர்வ இல்லத்தை பறிக்கும் அரசின் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதும் என நகர்க்கிறது அந்த அரசியல். காய்ந்து போய்க் கிடந்த வீடு இப்போது மக்களால் நிரம்பி வழிகிறதாம்.

இதுதான் அரசியல்.





பி. ஹரிதேஷ்,
தரம் 4,
மானிப்பாய் சோதி வேம்படி
வித்தியாசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org